கடவுள் துணை.

# கதிரேசன்பேரில்

## ஆனந்தக்களிப்பு.

## கதிர்காமத்துவசல்.

## கதிர்காமக்கும்மி.

## மங்களம்,

இஃது.

மதுரைச்சில்லா இராமநாதபுரம் சீர்மைசேகரம்

திருப்புல்லாணியிலிருக்கும்

தங்கம் முத்துராமலிங்கம்பிள்ளையவர்கள்

குமாரராகிய

**இராமசாமியாபிள்ளையவர்கள்**

இயற்றியதை.

சென்னை-இட்டா·

**பார்த்தசாரதிநாயுடு**

அவர்களாற்றமது

ஸ்ரீபத்மநாபவிலாசஅச்சுக்கூடத்திற்


பதிப்பிக்கப்பட்டது.

MADRAS.

1903.

நெ. 84. ஆசாரப்பன்தெருவு சென்னை.

கடவுள் துணை.



# கதிரேசன் பேரில் ஆனந்தக்களிப்பு.

காப்பு.

குருவிருத்தம்.

வெத்திமாமயில் வேலவர்மீதினிற்
சித்தியானந்தச் சிந்துபுகழ்ந்திட
சத்திவாலை யருள்திருமாமத
அத்திமாமுக னைங்கரன்காப்பதாம.

ஆனந்தக்களிப்பு.

தானந் தனா தந்த னானா—தந்த
தானா தனா தந்த னாதந்த னானா

சீர்மேவுங் கதிர்காமம் வாழும்-வள்ளி
தெய்வானை மணவாளன் மீதிலென்னாளும். க

பார்புகழ வேதுதி சிறக்க-எங்கள்
பாரமதை யானைமுகன் றன்னருள்பெருக்க. உ

தானந்த நடனமயி லேறுஞ்-சுவாமி
சரஹண பவானந்தன் மீதிலருள்சேரும். ௩

ஆனந்தக் களிப்பதனைப்பாட-கையிலை
யாளிமல ரடியைநா னனுதினந்தேட. ௪

சதுர்முகன் தேவிநயந் தரவே-யிந்தத்
தாரணியி லிகந்தகவி வாணர்ஜெயம்பெறவே. ௫

கதிர்காம மானகர் சிறப்பாம்-எங்கள்
கண்ணனரு ளால்சொன்ன ஆனந்தக்களிப்பாம். ௬

திசைமெய்த்த புகழ்கொண்டு நாளும்-நல்ல
செல்வமிகு யாபார தர்மமதுவாழும். ௭

வசியகுல நகரத்தார் தானே-வந்து
வணங்குமெங்கள் கதிரேசன் சன்னதியில்நானே. ௮

சொன்னகவி தன்னையரங் கேற்ற-வதனில்
சொற்பிழைகள் வாராம லென்னையுமேகாத்த. ௯

நன்னய மிகுந்த தெய்வானை-யம்மன்
நற்கமல ரடியிணையை நான்றுதிப்பேனே. ௧௦

அருமறைகள் புகழ்துதிகள் பூணும்-வள்ளி
யம்மையென் கவிதனக் கருள்தரவும்வேணும், ௧௧

குருமுனியைப் பணிந்துகவி கூற-அதற்கு
குறையொன்றும் வாராமல் சபையிலாங்கேற. ௧௨

சீதையால் ராமனு முன்னாலே-வந்து
தெர்ப்ப சயனஞ்செய்த திருப்புல்லாணியிலே. ௧௩

நாதனருள் கங்கைகுல சீலன்-தங்கம்
ராம சாமிசொன்ன கவிக்குகந்தவேலன். ௧௪

எச்சரிக்கை யென்றிடும்பன் கூற-வந்து
இருபுறமுங் காவடிகள் நின்றுவிளையாட. ௧௫

பச்சைமயி லேறியருள் சீலன்-நித்தியம்
பக்ஷம்வைத் தென்கலி யகற்றும்வடிவேலன். ௧௬

தென்கதிரை மானகர் விளங்க-வந்த
தேவாதி தேவர்ஜெயங் கூறியேமுழங்க. ௧௭

அன்பான சன்னதி யிலங்க-கதிரை
ஆறுமுக வேலருட மாபதிதுலங்க. ௧௮

முன்னாலே கோபுரமுகப்பும்-எங்கள்
முருகேசன் கோவில்முழுச் செம்பால்வகுப்பும் ககூ

அன்னமெனும் தெய்வானை மாடம்-வள்ளியம்மை
யவள்பந்தடித்துவிளை யாடிடுங்கூடம். உ௰

மூதண்டயோகபதி யேறும்-கதிரை
முத்துலிங்கசுவாமியுட சன்னதியைப்பாரும். உக

நாதமொடுகீதமு முழங்க-வசிய
நகரத்தார்கட்டிவைத்தசத்திரம்விளங்க. உஉ

காணிக்கைகொண்டுவெகு கோடி-ஜனங்கள்
கதிரேசன்சன்னதிக்கி வருவார்கள்தேடி. உங

மாணிக்ககெங்கைநீ ராட-இங்கே
மாதவரும் மனிதர்களும்வந்துநிதங்கூட. உச

பொன்னலங்காரநகர்வாசம்-எங்கும்
புகழ்பெற்றநவரத்ன மேவிளையுந்தேசம். உரு

சொர்னமிகு கதிர்காவளமெத்த-தோழி
சொல்லுகிறேன் நாட்டுவளம்வானுலகுதித்த. உசா

இந்திரனுடயேவலதினாலே-வந்த
எழுமேகமுமொன்றாகூடியேமேலே. உஎ

சந்திரனெனவாகவுமே வோங்கி-சத்த
சாகரமதில்த்தாவி தண்ணீரைவாங்கி. உஅ

மாலெனவிசும்பிடைபடர்ந்து-முகில்கள்
மண்டியேகெற்சித்து மின்னலுமடர்ந்து. உகூ

நாலுதிசைநாடியே தெளிந்து-கதிரை
நகர்பூமியெங்குமழைமாரிகள்பொழிந்து. ங௰

ஏரிகுளம்வாவிகள் நிறைந்து-வயல்க
ளெங்கெங்குமேகன்னல் சென்னலும்வளர்ந்து. ஙக

வீரியமிகுந்தமுதத்தின்-நல்ல
வெண்கமுகு சோலைமலைமேலெங்குந்தோண. ஙஉ

தனியேபழுத்துதிருமாவும்-அதனில்
தாவியொரு கொம்போடே கொக்குகளுமேவும். ஙங

இனியமலர்வாசனைகள்தேடுப்-வீறென்.
    றிருபத்து நாலுகால்வண்டினங்கூடும். ஙச
நாகமதுநாகமதிலேறும்-தூய்ய
    நாகவேபுனைந்தசில மாதரையும்பாரும். ஙரு
நாகமலர் சோகுமலர்முல்லை-யிந்த
    நாட்டினிலே கலைபகடுக்கொருகொம்புமில்லை. ஙசு
முல்லையிருவாட்சிகளெடுத்து-அந்த
    முல்லையிலேயில்லில்லா மடவார்தொடுத்து. ஙஎ
வல்லவினை தீரவெனத்தேடி-மாது
    வள்ளிதெய்வானைக் கிடுவார்கள்கோடி. ஙஅ
சதுர்மறையும் புகழ்தேவரிங்கே-வந்து
    தான்வாசஞ்செய்கதிரை மாணிக்கெங்கை. ஙகூ
இதிலேநீ ராடுவதுசித்தி-ஜென்மம்
    ஈடேறுஞ்சாயுச்சிய பதவியிலே மூத்தி. சய
கோலமாமலையழகைப்பாரும்-கதிரை
    குமரேசனருளாலே வஃவினைகள்தீரும். சக
மூலகணபதிக்கிளைய வாகன்-கதிரை
    முத்துலிங் கேசருக் கருள்செய்தயோகன். சஉ
மாமேவும்புலிபுகழுந் தேட்டான்-கதிரை
    மகிமைகளைச்சேடனுலளவிடமாட்டான். சங
பூமேவுங்குழல்வள்ளி நேயன்-சுவாமி
    புண்ணியன்தேவருக்கும் மனிதருக்கும்நாயன். சச
பச்சைமால் தனக்குமருகோனே-சுவாமி
    பழனிமலைமீதினிலே மேவுமுருகோனே. சரு
வச்சிராயுதன்தம்பிமருகா-உந்தன்
    மலரடியெனக்குநிதந் தரவேணுமுருகா. சசு
நவவீரர்துணையானகுகனே-நம்பி
    நாராயணன்றங்கை யபிராமிமகனே. சஎ

நவமணியணிந்த வொளிமூவா-நின்று
நடனமிடுமயிலேறி யெணைவந்துகாலா. ௪௮

கனககுண் டலமிட்டநீதா-சுவாமி
கார்த்திகேயா லட்சம்படைவீரர்நாதா. ௪௯

தனமேருபாக்கியமருள் வேலா-எங்கும்
சர்வபரிபூரண னந்தசில்பாலா. ௫௰

ஓராறுமங்கையர்கள் சேயன்-பவனி
ஒய்யாரமாகமயில் மீதுலவுதூயன். ௫௧

ஈராறுபன்னிருகை யாண்டி-புவன
மெங்கெங்குமேதுதி மிகுந்தமெய்யாண்டி ௫௨

ஆண்டிபொன்னாண்டிசிவ னாண்டி-பழனி
யாண்டிமலை யாண்டிமலை யாண்டிசிவனாண்டி. ௫௩

ஆண்டிமக னாண்டியிவ னாண்டி-நதிகள்
அழகானசாமிமலை திருப்பரங்குன்றாண்டி ௫௪

சிக்கல்புர வச்சேரி யாண்டி-சுவாமி
திருச்செந்தூ ரெட்டிகுடி குன்றைக்குடியாண்டி ௫௫

மிக்கதிருவேரகத்தாண்டி-கதிரை
மேவிவளர் வேல்முருக னாறுமுகத்தாண்டி ௫௬

சோலைமலை கழுகுமலை யாண்டி-நல்ல
தோகைமலைவிராலிமலை சென்னிமலையாண்டி ௫௭

வாலையருள்பெற்றவடிவேலா-முனிவர்
மாதவர்க்கேயெந்தநாளுமனுகூலா ௫௮

விடவரவுபடமும் விசைகெடவும் படியே
வடவரைகள் கிடுகிடென கெஜமுமசைபடவும் ௫௯

கடல்சுவர் கதிர்மதிகலங்க-தாவி
கனவேகமாகவரு மயில்மீதிலங்க ௬௰

மேலாகிவிளையாடு மெய்யா-வெற்றி
காலாயுதத்தையு மெடுத்தமுருகையா ௧௬

சாலோகசாமீபமென்னும்-சுவாமி
சாரூபசாயுச்சிய பதவியிலேமுன்னும் ௬௨

ஆகவேநின்றபரநாதா என்னை
ஆதரித்தாளவர தேணுங்குருநாதா ௬௩

தாகமாயிருக்குதுனைக் காண-கந்த
சுவாமிவருவாயெனது கண்ணெதிரேதோண ௬௪

அரகராவேலனே நமாவோம்-சுவாமி
ஆறுமுகமாய்வந்த வடிவேநமாவோம் ௬௫

அரகராமுருகா நமாவோம்-வாலை
யம்பிகைபராசத்தி மைந்தாநமாவோம் ௬௬

அரகராகுகனேநமாவோம்சுவாமி
அன்பருக்கன்பான பொருளேநமாவோம் ௬௭

அரகராதேவா நமாவோம் - சுவாமி
அகிலபுவனத்திலும் நிறைந்தாய்நமாவோம் ௬௮

மயிலேறுமொயிலா நமாவோம்-பொதிகை
மலைமேவுந் தமிழ்முனிவன் குருவேநமாவோம் ௬௯

மயிலேறும்கந்தாநமாவோம்-வட்ட
வடவாலில்மேவுமால் மருகாநமாவோம் ௭௰

மயிலேறும்நாதா நமாவோம்-சுவாமி
மலைமேவும் பரமனுடகுருவேநமாவோம் ௭௧

மயிலேறுகின்றாய் நமாவோம்-தங்க
வடிவானவேலது வுகந்தாய்நமாவோம் ௭௨

திரிபுர பவாவா நமாவோம்-வாலை
சேயனேதிகழொளி பலாவாநமாவோம் ௭௩

பரிபுர பவாவா நமாவோம்-வள்ளி
பாகனே பவனொழி பவாவாநமாவோம் ௭௪

சரஹண பவாவா நமாவோம்-கந்த
சுவாமியேசயலொழி பவாவாநமாவோம். ௭௫

தரும துரையேநீரு மென்னை-நல்ல
தருணமிது காணிந்த வேளையிலேயென்னை. ௭௬

காவாவுன் னீரடிகள் தன்னை-நான்
கண்டெனது கலிதீர வந்துமென்முன்னை. ௭௭

வாவென்று சொல்லமன மிலையோ-உமக்கு
வள்ளி தெய்வானைவிடை தந்தனுப்பவிலையோ. ௭௮

தஞ்சமென் றேனே யுனக்கு-எனது
சஞ்சல மெனுங்கலியைத் தீர்ப்பாயெனக்கு. ௭௯

அஞ்சறிவு மானதா யகனே-சுவாமி
அகிலாண்ட கோடிபிரம் மாண்டநாயகனே. ௮0

உன்கிருபை தந்துமேகண் பாரும்-இந்த
உலகமுழு தாள்பவனே யென்கலியைத்தீரும். ௮௧

அன்புபெரும் வரைராஜன் பேரா-சுவாமி
அடியனுன் னடியிணையைக் காணநீராரா. ௮௨

வாவாயென் றேவாநீ யென்றே-சுவாமி
வடிவேலாவாவாவெனத்தொழுதுநின்றே. ௮௩

எவன்றேடி னுலுந் தேடட்டும்-நமக்
கென்சொல்லிக் கவிபாடி னும்பாடட்டும். ௮௪

நமக்கென்ன வென்றிருக்கிறீரோ-சுவாமி
ஞாயமோ நானுமுறை யிட்ட தறியீரோ. ௮௫

உமக்குமன மிரங்காத தேது-எங்க
ளுத்தமி துரந்தரியின் பாலாயிப்போது. ௮௬

ஐயாநீ கிருபைசெய்த தாலே-இந்த
அகிலாண்ட கோடிபூ மண்டலத்தின்மேலே. ௮௭

பெய்யான சரிதையி லனேகர்-அதற்கு
மேலான கிரிகையி லிருப்பவரனேகர். ௮௮

தவயோகக் காரர்வெகு வெள்ளம்-ஞானந்
தங்கியே யிருப்பவர்க ளோமகாவெள்ளம். ௮௯

அவர்களைப்போல் நான்பிறந்த திலையோ-சுவாமிக்
காளாக வெனக்குவிதி வயனெழுதவிலையோ. ௯0

அன்னையவ ளீன்றெடுத்த கெதியோ-யெனக்கு
ஆதியிலே முன்னவர்கள் செய்துவந்தசதியோ. ௯௧

என்னகுறை யிருந்தாலுந் தீர்த்து-உந்தன்
இணையடிக்கி யாளாக வென்னையுமேசேர்த்து. ௯௨

ஆளாக்கி யாள லாகாதோ-எந்த
னகந்தனிலே நீயிருந்து வாழலாகாதோ. ௯௩

பாழான மனங்குவியு திலையோ-யென்ன
பாவமோ வதிலிருக்கும் பிசகுதெரியலையே. ௯௪

வஞ்சகமில்லாமலே கண்பாரும்-முடிவில்
மறலியுட தூதரென்னை வருத்தாமல்காரும். ௯௫

அஞ்சுதலை யாரருளுந் துரையே-உமக்கு
அஞ்சுதலை யால்வேத னிருந்ததுவுஞ் சிறியே. ௯௬

ஆறுதலை கண்டண்டரய்யா-பின்பு
ஆறுதலை யாய்ப்பதியை யாண்டாரேமெய்யா. ௯௭

ஆறுபடை வீட்டுக் கதிகாரா-வந்த
அசுரருட னஞ்சாத போர்புரியும்வீரா. ௯௮

சத்தியுமை பாலகனே சாமி-உந்தன்
தாசனுக்குத்தாசனெனைக் கார்ப்பதற்கேமி. ௯௯

சுத்தபரி பூரணு வுன்னை-ஓதி
துதிக்குமடி யார்க்கடிமை யாகவருளென்னை. ௧00

பொய்யாத வாழ்வருள வேலா-கதிரை
ஐயாவே யெனையாளுந் தேவாதிதேவா. ௧0௧

ஒய்யா மானமுரு கோனே-வந்த
உற்பவ மெனுந்துதியை செப்புவேனுனே. ௧0௨

உரமான வசுரரிடராலே-தேவ
ரோடிமுறை யிட்டாரே கைலைமலைமேலே. ௧0௩

அரனசுரர் மேல்க்கோப மாகி-கைலை
யாளிவிழி தனிலே யொரு பொறி சிதறி யேகி. ௧0௪

சரஹணப் பொய்கையி லமர்ந்து-அதுவுஞ்
சந்திரோ தயம்போலே பாலனென வந்து. ௧0௫

உருவாகி மலர்மீதி லானார்-எங்கள்
ஓம்நமசி வாயரெனும் பரமனருள் மகனார். ௧0௬

அப்பவே சென்னியோ ராறும்-மெத்த
வழகான செந்திரு புயங்க ளீராறும். ௧0௭

உற்பவ மானபனி ரண்டு-விழிகள்
ஒளிவாகி வோராறு பெண்கள்பா லுண்டு. ௧0௮

அயனையுஞ் சிறையினில் விடுத்தான்-கந்த
னரனுக்கு வுபதேசஞ் சொல்லியே கொடுத்தான். ௧0௯

கயமுகா சூரன்முதலோரை-கந்தன்
கைவேலி னாலவர்கள் கருவறுத் தாரே. ௧௧0

தங்கவடி வேலலங் காரன்-மாது
தையல் தெய்வானை மணமேவு சிங்காரன். ௧௧௧

தென்கதிரை மானக ரிலங்கும்-சுவாமி
சிங்கார மாயுனது வருள்கிருபை பொங்கும். ௧௧௨

சித்தமு மகிழ்ந்துவரும் லோலன்-வள்ளி
தெய்வானைக்கிணையான சித்ரமயில் வேலன். ௧௧௩

சத்தி வேலாயுதமு முடையான்-பூண்ட
தண்டைகள் கலீரெனவே வந்தருளும் நடையான். ௧௧௪

கடகமெனு மானதிங்களிலே-எங்கள்
கதிரேசன் திருவிழா பவனிவரு கையிலே. ௧௧௫

கடல்போலே பேரிகை முழங்க-விருது
கட்டிய மிருபுறமு மருகேதயங்க. ௧௧௬

செங்காவிப் பட்டாலே கோடி-கொடிகள்
ஜெண்டாவு மாலவட்டக் குடைகள் பலகோடி. ௧௧௭

மங்காத சாமரைகள் கோடி-வீசி
வருவார்கள் நடனமிடு மடமாதர்கோடி. ௧௧௮

சேர்க்கையாய் முரசுசங் கூத-நல்ல
செந்தீ வளர்ப்பவர்கள் நான்மறையுயோத. ௧௧௯

பார்க்கவெகு மாமுனிவர் வரவே-கவிகள்
பாடியே வரகரா வென்றுபுகழ்பெறவே. ௧௨௦

ஆணிப்பொன் மாலைக ளிலங்க-மொய்த்த
அழகான வாலாத்தி தீபமேதுலங்க ௧௨௧

மாணிக்கப் பேழையி லுகந்தார்-கந்தன்
மதயானை மேலேறி யேபவனிவந்தார். ௧௨௨

மதகரியோ வருகிறதைப்பாரும்-சுவாமி
மாணிக்கப்பேழையி லுகந்ததையும்பாரும். ௧௨௩

கதிர்காம திருவிழாநேத்தி-எங்கள்
கந்தனு முகந்ததிரு வாபரணஞ்சாத்தி. ௧௨௪

கரியுலவு வனமூடு சென்று-செல்லக்
கதிர்காமம் போய்வந்து நீரறுப்பென்று. ௧௨௫

சரியான பௌரணையை நாடி-கந்த
சாமிசங் கீதபரி வாரமுடன்கூடி. ௧௨௬

வாரிபோல் பெருகிநீ ரோடி-வார
மாணிக்க செங்கையிலே வந்துநீராடி. ௧௨௭

கூரான வடிவேல் சுமந்து-எங்கள்
குமரேசன் வள்ளிதனை நாடியேயுகந்து. ௧௨௮

புள்ளிமயில் வேலர்விரை வாக-சென்று
பூவையெனுங் குறமாது கோவிலுக்குளேக. ௧௨௯

வள்ளியம்மை சுவாமிதனைக் கண்டு-வாரு
மணவாள ரென்றடி பணிந்தன்பு கொண்டு. ௧௩௦

சித்ரமணி மலரணையில்த் தாவி-நல்ல
செங்கமலக் கரத்தா லணைத்திவர்கள்மேவி. ௧௩௧

கொத்துமுத்து நத்துவளை திருத்தி-யிவர்கள்
குனிர்ந்தகமகமெனமலர் வாசனைகள்பொருத்தி ௧௫௨

இங்கிர்த மணாளகுண நீதா-யெனக்கு
யினியசுகபோகமத லீலாவினோதா ௧௫௩

எங்கள்குலம் விளங்கவந்த நேசா-சுவாமி
யெனக்கிரங்கி யிதுசமயம் வந்தவிசுவாசா ௧௫௪

அத்தைபெற்ற முத்தேயெங் கோனே யென்ற
ஆரணங்கை யுபசரித்து தேனேயெம்மானே ௧௫௫

முத்திரையிட் டிலங்குசெங்கை யாளே-வள்ளி
மோகனமே யென்றந்த வேலவர்கையாலே ௧௫௬

கலந்தணைந்தசுகந்தமண வாசன்-உங்கள்
கட்டழகி வள்ளிதனை பார்த்துமதபோஜன் ௧௫௭

சலதரத்தைப் பழித்தகுழ லாளே-இந்திர
தனுவோவென்றதிசயிக்கும் புருவநுதலாளே ௧௫௮

எந்தனுக் கிசைந்த மனையாளே-வள்ளி
இந்திரன்மகள் தெய்வானைக் குகந்ததுணையாளே. ௧௫௯

வந்துவெகு நேரமா குதடி-யெந்தன்
மாதுதெய் வானையெனைத் தேடுவாள்நாடி. ௧௬௰

போய்வாறேன் விடைதாடி யென்ன-வள்ளி
பூவையவள் கேட்டெந்தன் சாமிநீர்சொன்ன ௧௬௧

வாய்ச்சம்பிர தாயம்வெகு வீச்சு-நான்
போய்வார மென்றுசொன்ன வகைதானென்னபேச்சு, ௧௬௨

அங்கேபோய்செலுத்துமதி காரம்-யெந்த
னரண்மனையி லிருந்தாக்கால் நடக்காதோவீரம் ௧௬௩

இங்கோண்டு நாளிருந்து போனால்-சுவாமி
என்னகுறை வாகிவிடுங் காணுமுமக்கதனால் ௧௬௪

என்மனையி லிருக்கையிலே யவளேன்-உம்மை
யேன்தேட வேண்டியது நீர்போறவிதமேன். ௧௬௫

உண்மையெனக்கின்னதென்று தானே-சுவாமி
உரையுமெனவேலவரும் வள்ளியென்மானே. ௧௪௬

இங்கேவந்து நானிருப்பதாலே-யெண்ணே
யெங்கையோ வென்றுதெய் வானையொருக்காலே. ௧௪௭

மங்கையருந் தேடுவா ளின்று-யெனக்கு
வள்ளிநீ விடைதாடி போய்வாறேனென்று. ௧௪௮

இவர்கூற வள்ளிமின்னுளே-சுவாமி
யின்றிரவு யிங்கிருந்து போகலாம்நாளே. ௧௪௯

அவசர முமக்கென்னயங்கே சுவாமி
ஆனாலும்நீர்போக சம்மதியே நிங்கே. ௧௫௰

கூடாது உம்மைவிட மாட்டேன்-மூத்த
குடியாளுக் கஞ்சிநான் பயப்படவுமாட்டேன். ௧௫௧

தேடியிங்கே தெய்வானை வரட்டு யென்றும்
செப்புவதும் யொப்பினையும் வள்ளிகைநீட்டும் ௧௫௨

பார்த்தே தடிவள்ளி மானே-சற்றும்
பாராம லிம்மொழிக ளேன்சொல்லுவானே. ௧௫௩

ஆத்திர முனக்கென்ன போடி-தெய்வ
யானைக்கி நிகராவ ரோபெண்கள்கோடி. ௧௫௪

சொந்தமாய் கிருபை பாராட்டி அந்த
தோகயரைப் பருவமதில் நான்மாலைசூட்டி. ௧௫௫

வந்தபடி யாலவ ளுனக்கு முந்தி
வந்தவளு மானதால் நானுமவளுக்கு. ௧௫௬

அடக்கமா யிருப்பதுவே சிலாக்கியம்-வள்ளி
ஆனாலுமில்லறத்துக் கதுதானே யோக்கியம். ௧௫௭

மடற்கொடிதெய்வானையவ ளிங்கே நானும்
வந்தவகை தெரியாது தேடுவாளங்கே. ௧௫௮

போகவிடை தாவென வதட்ட-யெங்கள்
பூவையெனுங் குறமாதுக் கதிகோபமுட்ட ௧௫௯

மாகனக மேடையிலிலங்கும்-உமது
மனையாட்டி மூத்தகுடி யாளெனவிளங்கும். ௧௬௰

தெய்வானை சொந்தமாய்ப் போச்சோ-நானுந்
திருட்டுத் தனமாய்வந்த கள்ளிபோலாச்சோ ௧௬௧

கைமாயஞ் செய்தோமே நாங்கள் ஒருவர்
காணாதே மாலையிட்டுவந்தீரோவுங்கள் ௧௬௨

சாதியா ரேசுவா ரோகாண் நீருந்
தலைமறைய யென்மனைக்கி வருவானேயேன்காண். ௧௬௩

ஆதியிலே யெனையு நினைத்து வந்த
தறியாளோ தெய்வானை யும்மையுமழைத்து, ௧௬௪

கூட்டிவந்த நாரதரைக் கேளும்-வனத்தில்
குளத்தருகி லேயிருந்தகரடிபுலிவாழும் ௧௬௫

காட்டினி லுமக்குதவி செய்தார்-வுங்களண்ணன்
கணபதியைக் கேட்டாலுஞ் சத்தியமாய்ச்சொல்வார் ௧௬௬

சிவதவங்கள்செய்சபைமுன்னாலேவைத்து
தெய்வானை யைத்தாலி கட்டினதினாலே ௧௬௭

அவள்மாத் திரஞ்சொந்தக் கிளியே சுவாமி
ஆனாலும் நான்கிழக்கு முகமிருக்கவிலையோ ௧௬௮

வள்ளியிவை சொல்லவே திகைத்து சென்னல்
வளமான தென்கதிரை வேலனும் நகைத்து ௧௬௯

கள்ளிபோல் வீணிலிரை யாதே-பொல்லாக்
கசடான குறவருட சாதியொளியாதே ௧௭௰

ரெண்டுமு சாரமா காது யென்று
நீணிலத்திற் சொல்லுவது சரியானதோது ௧௭௧

வண்டர்குல மானேயுனைநாடி-வந்த
மணவாளனுக் கெதிர்கள் பேசலாமோடி. ௧௭௨

நில்லுநான் போய்வாரே னென்று-சொன்ன
நினவறிந்து வள்ளியவள் சிறியெதிர்நின்று ௧௭௩

வல்லப மூமக்கென்ன காணும்-எனக்கு
வகைசொல்லி யப்பாவே நீர்போகவேணும் கஎச

என்சமர்த்தைப் பாருமினி யென்றே வள்ளி
இடைதனிலே சேலையை யிறுக்கியெதிர்கொண்டே கஎ௫

அன்புற நெருங்குவது கண்டார் வள்ளி
அப்பாலே நில்லென்று சொல்லுகிறேனென்றார் கஎசு

சொல்லுகிற சமாச்சார மென்ன-உமது
தொழிலைநான்னெகிலு மறிந்துமினியென்ன கஎஎ

நல்லதினி மேற்கொண்டு பார்ப்போம்-உமது
ஞாயமதை தேவசபை யிலேசொல்லிக்கேழ்ப்போம் கஎஅ

தேவசபையிலேசொல்லிப்பாரு அவற்கு
தெரியுமடி தினைப்புனத்தில் நீயிருந்தசிரு கஎகூ

ஒவியமே உன்னுறுதி கேட்க-யெழுதும்
உடன்பிடிக்கை முறியுண்டோ கொண்டாடிப்பார்க்க கஅ௰

உடன்பிடிக்கை முறியெழிதித் தாறேன்-வள்ளி
யுனக்கேவல் செய்வதற்கு உன்பிறகேவாறேன் கஅக

கடக்கவெனைத் தள்ளாதே மானே-யென்று
கட்டிமுத்த மிட்டது கசப்பேறுவானே கஅஉ

தனியே வனத்திலிரு பேரும்-கூடுஞ்
சையோக வேளையிலே பார்த்தென்னைநீரும் கஅங

இனியசெந்தேனேகற் கண்டோ-உந்த
னிதழென்றுசொன்னதுவு மில்லையோவுண்டோ கஅச

முன்னிருந்த யினிப்பென்ன போச்சோ யிப்போ
மூத்தகுடி யாளுமக்கு சர்க்கறைபோலாச்சோ கஅ௫

என்னைநீர்வகைசொல்வதேனோ-சுவாமி
யென்குலத்தை நீரிகழ்ந்து பேசுவதுமேனோ கஅசு

தந்தையுங்கள் தேட்டையெடுத் தாரோ-யெங்கள்
சாதியார் வந்துநிதந்தின்று கெடுத்தாரோ கஅஎ

எந்தனுற் குறைகளே துண்டோ - சுவாமி
இழுக்கெந்த சாதியினு மில்லாமலுண்டோ ௱௮௮

மங்களகல் யாணமதில் நல்லால் - அந்த
மணவறையி லென்தகப்ப னிட்டநகையல்லால் ௱௮௯

உங்களிடம் வந்தநாட் கொண்டோ - யெனக்கு
ருத்திராட்ச வடத்துக்கொரு கடமணியுமுண்டோ ௱௯௰

மாதிவை யுரைக்கமுத் தையன் - வள்ளி
மங்கைதனைப் பார்த்தேதநு சொல்வார்மெய்யன் ௱௯௧

ஏதடிநீ பேச்சதிகங் கொண்டாய் - வள்ளி
யென்னுடைய சாதியி லிழுக்கென்னகண்டாய் ௱௯௨

குபேரன்மகள்போல பேசாதே - நொப்பன்
கொடுத்துவிட்ட வரிசைகளை வெளியேசொல்லாதே ௱௯௩

சபையார்க ளென்னவறி யாரோ - யிந்த
தாரணியி லுள்ளவர்க ளெவருமறியாரோ ௱௯௪

உடுத்திவந்த துணிக்கிவேறுண்டோ-களிம்பு
ஊறிய பித்தாளை யொலைக்கிவேறுண்டோ ௱௯௫

தொடுத்திருந்த கருகமணி யோடே-யென்னை
துடர்ந்துவரும் போதுனக் கேதுபட்டாடே ௱௯௬

வண்ணார்கள் வெளுக்காத கலையுஞ்-சுத்த
வாணியர்கள் யெண்ணையிட் டறியாததலையும் ௱௯௭

புண்ணுக்கு போலழுக்கு மேலுங்-காட்டில்
புரண்டிசெடி முள்ளிழுத்து சுரண்டிவிட்டகாலும் ௱௯௮

எப்போதுங் காய்கிழங்கை தின்று-நீயும்
இருந்தகெதி தெரியாதோ வரும்போதென்பின்னும் ௱௯௯

அப்பவே நானழைத்து வந்து-நல்ல
வாபரண மானதையு மழகாயணிந்து ௨௱

செம்பவழ மாளிகை யமைத்து-உனக்கு
செங்கமலத் தாதிகளை யேவல்நேமித்து ௨௱௧

நம்பிரான் செய்ததை மறந்து-வள்ளி
நாடகமே பேசுவது மென்னடிபிகழ்ந்து உ௱உ

மாதேகேள் பதறுதேவாடி-யெந்தன்
மனமுழுது மறியாமல் சொல்லாதேபோடி உ௱ங

கோதையே யிதுவென்ன மூர்க்கம்-உங்கள்
கூறறிந்து சொல்லுகிறேன் குறவருடமார்க்கம் உ௱ச

சாராயங் கள்ளுகள் குடித்து-குறவர்
சந்திக்கி சந்தியே சண்டைகள்பிடித்து உ௱ரு

பூராயம் தெரியாமற் கத்தி-கண்ட
பூனைகளை யெரவார முசலென்றுகுத்தி உ௱சு

தின்பதுவு முண்டதிக மாக குறவர்
சேரியிலே நீபழகி வந்தவைபோக உ௱எ

செம்பவள வாயாளே யென்று-சுவாமி
செப்பவே வள்ளியவள் வெஞ்சினங்கொண்க உ௱அ

விண்ணணம் பேசுவது சீரோ-சுடலை
மீதிலெலும் பானதுவை தின்றதுவுமாரோ உ௱கூ

கண்ணப்ப னெச்சிதிங் கலையோ-சிவனுங்
கரிக்காகப் பாலகனைக் கொன்றதுவு மிலையோ உ௱ய

புத்தியுமக் கில்லாதே போமோ-கெட்ட
புனக்குறவர் பெண்ணைநீர் சம்மதிக்கலாமோ உ௱யக

யெத்திசையும் புகழ்பெற்ற நாதா-வென்று
யிவள்சொல்லும் வசைகண்டு கூறுவார்தோதா உ௱யஉ

அடங்தேரு வார்குடிமி ருந்தால்-குரவர்
அவர்தனக் கேசிலவுக் கில்லா திருந்தால் உ௱யங

கடன்வாங்கு வார்சம்மதித்து-தாலி
கட்டிய பெண்டுகளை யீடாகவைத்து உ௱யச

குடுத்துவிட்ட பணத்துக் கீடாக-வைத்த
குறத்திகளைப் பணங்கொடுத்த குறவன்வெகுவாக உ௱யரு

அடுத்தவனை யனுதினமுங் கூடி-யிவர்கள்
அஞ்சாறுபிள்ளைகளைப் பெற்றபின்தேடி ௨௧௬

பணங்கொடுத்து திருப்புகிற போது-பெற்ற
பாலரையுங் கூடவே கூட்டியவள்மாது ௨௧௭

குணமாக முன்னீடு வைத்த-பழைய
குறவனுடன் போவதுங்கள் சாதியிலேபெத்த ௨௧௮

இதுபுதுமை யிவ்வுலகிலுண்டோ-வள்ளி
யேந்திழையே யிதைவிட வெச்சைவேறுண்டோ ௨௧௯

கதிகொண்ட மயில்வா கனத்தார்-இந்தக்
கதைசொல்வே வள்ளியவ ளெதிருரைத்தாள் ௨௨௰

கூறத்தியென்று யெனக்குவசை புரியுஞ்-சுவாமி
கும்பமுனி யாலுங்கள் சேதிகொஞ்சந்தெரியுந் ௨௨௧

மறந்தீரோ நீரறிந்த திலேயோ-யொப்பன்
மலைவேடன் மகளைப்போய் மாலையிட்டதிலேயோ ௨௨௨

சிந்தைமகிழ்ந் தொருபெண்ணைத் தூக்கி-உங்கள்
சிவன்தலையில் வைத்துமே சுமந்துக்குச்சாட்சி ௨௨௩

நந்திகேசு பரர்சொல்லக் கேட்டேன்-சுவாமி
ஞாயனிச மில்லாமல் நான்சொல்லமாட்டேன். ௨௨௪

ஆட்டுக்கா லதுதனை யெடுத்தார்-உங்க
ளப்பனென் றவனிமுழு தெங்கும்பழித்தார். ௨௨௫

கேட்டுப்பா ருமதுதாய் ஐயோ-ஒற்றை
மாட்டுக்கா றனைவைத் திருந்ததுவும்பொய்யோ ௨௨௬

கண்ணு யிரங்கொண்ட நேத்தி-யொம்மான்
பெண்ணுசை கொண்டல்லோ வந்தவபகீர்த்தி ௨௨௭

பெண்ணொருவர் கொடுக்காத தெதினுல்-யொண்ணன்
பெருவயறு கொண்டுவமுக் கரையிலிருந்ததினுல் ௨௨௮

அண்ணனுமே மத்தாளங் கொட்ட-சொந்த
அருமைமரு மகனின்று கைத்தாளந்தட்ட ௨௨௯

விண்ணவர்கள்கூடியே நகைக்க-வந்த
வேதியரும்மாதவருங் கண்டுபிர்மிக்க ௨௫௰

தேவடியாள் போலுமது வன்னை-கூடுந்
தேவசபை யிலேனின்று ஆடலையோமுன்னை ௨௫௧

பாவலருக் கருள்புரியுஞ் சீலா-பிதையும்
பார்த்தவர்கள் சிரியாரோ தங்கவடிவேலா ௨௫௨

பத்மாசூரனுக்கு மிகப்பயந்து- உங்கள்
பரமசிவ னேடலையோ காட்டுவழிநுழைந்து ௨௫௩

கைப்பொருளு மில்லாமல் தேகி-யென்று
கைப்பிசை வாங்கலையோ பரமசிவயோகி ௨௫௪

கும்பமுனிக் கருள்புரிந் தோரே-யென்று
கூவியே வள்ளிசொல்லு மொழிகளறிந்தாரே ௨௫௫

தென்பானயென்மோக வள்ளி-யிந்த
சீமையிலே திருடிவருங் குறவர்குலக்கள்ளி ௨௫௬

குதிகொண்டவனக்குறவச்சாதி-வகையை
கூறறிந்து சொல்லுகிறேன்கேளுமவர்சேதி ௨௫௭

சதிர்பெருகுந் திருவிழாக்கடையில்-ஜனங்கள்
சந்தடுகளாகவே சயனிக்குமிடையில் ௨௫௮

கூசாமல்கூடவேபடுத்து-தூக்கம்
குலையாமல்பணிதிகளைக்கழற்றியேயெடுத்து ௨௫௯

பேசாமலோடுவதுகண்டு-குறத்தி
பெரியதனக் காரர்களுமேபிடித்துக்கொண்டு ௨௬௰

வம்பிலேதலையிரைக்கட்டிகுரத்தி
மார்பிலேபோடுவார்சொல்லென்றுகிட்டி ௨௬௧

செம்பாணிகொண்டுமே யிருத்தி-அவர்கள்
சேலையையுரிந்திம்மணமாகவேநிறுத்தி ௨௬௨

அடிதண்டமாகவே யடிப்பார்-குறவர்
அப்பவு மெடுக்கவில்லை யென்றுமேதுடிப்பார் ௨௬௩

தடியடிக்கி மசையாத சாதி-குறவர்
சங்கைகெட்டு நிர்ப்பார்கள் தெரியுமவர்சேதி உசச
என்றிவ ருரைக்கவுமே மாது-சுவாமிக்
கெதிராகநின்றேது சொல்வாளப்போது, உசரு
தொண்டர்தொழு கின்றமயி லேறுஞ்சுவாமி
சொல்லுவேனுங்கள் குலவளமைகளைப் பாரும் உசசா
அடையாளஞ் சொல்லுகிறேன் கேளும்-நல்ல
ஆவினங்கள் கூடிவரு மாய்ப்பாடிவாழும் உசஎ
இடையருட வளவிலென்னாளும்-உறியி
லிருந்தவெண்ணை திருடினதை யாரென்றுகேளும் உசஅ
அன்றுடனசோதையறிந்து-வந்து
ஆவினங்கள் கட்டுகிற கயறுல்வரிந்து உசகூ
ஒன்றாக மாதரொரு பக்கங்-கூடி
உரலோடே கட்டினதைச் சொன்னாலும்வெட்கம் உருய
கட்டுண்ட தும்ரோச மிலையோ-பெண்கள்
கட்டிய சேலைகளைக் களவாண்டதிலையோ உருக
வெட்டியசமர்க்களத்தி லேரும்-கிருஷ்ணன்
விஜையனுட குதிரைகளை மேய்க்கலையோபாரும் உருஉ
ஊத்துகிற கஞ்சிகளை யேத்தார்-கிருஷ்ணன்
ஊர்க்காலி மாட்டையெல்லாங் கூட்டியங்கேமேய்த்தார் உருங
கூத்ததிக முண்டின்னம் ரெப்ப-சொல்லக்
கூசுதே யென்மனமு மென்றிவளியப்ப உருச
கேட்டவடி வேலவர்கை நீட்டி-வள்ளி
கேளடி யுங்களுட வீடுமலைநாட்டில் உருரு
நீட்டியிரு கால்களை நிறுத்தி-அதனில்
நெட்டுமுட்டாகவளை கூட்டியேபொருத்தி உருசா
நத்திய கயற்றால் வரிச்சு-மழைக்கு
நனையாம லூங்கிலிலை யால்மேய்ந்ததுச்சு உருஎ

சுத்திவைத்த சுவரெல்லா மோட்டை-யசந்து
தூங்கவும் விடாதங்கே மூணுமூணுத்தமூட்டை ௨௫௮

ஆடேறி மேயுமதில் தொல்லை-வீட்டில்
அஞ்சுபேர் தனக்கதிக மிருக்கவிடமில்லை ௨௫௯

மூடாதவாசல்களைக் கண்டு-பார்த்து
மூடினாலு சாவொரு முகட்டொழுக்குமுண்டு ௨௬௰

தேடாத பொருள்சிலவு காணும்-வைத்த
தீபமுந் தெரியாது தோணுமல்தோணும் ௨௬௧

கூடாது குறவீட்டைநம்ப-சற்றே
குந்தவைக்க முடியாது நசுநசுப்புரெம்ப ௨௬௨

குறம்பாடிக் கஞ்சிகளை வாங்கும்-உங்கள்
குறவருட பக்கியெல்லாங் கூரையிலேதூங்கும் ௨௬௩

வரம்போது மில்லையென்னாளும்-டென்று
வடிவேலர் சொல்லவே வள்ளிமின்னாளும் ௨௬௪

தமக்கென்று சிறுகுடிசை கட்டி-குறவர்
தானிருப் பதுவேவசை யில்லாதகெட்டி ௨௬௫

உமக்கொரு தலத்தினிலும் நாடி-சுவாமி
ஒண்டயிட மில்லாமல் மலைக்குமலையோடி ௨௬௬

கையிலரைக் காசுமே யில்லாமல்-வீடு
கட்டியே குடியிருக்க வகையுமறியாமல் ௨௬௭

வெய்யிலிலும் வேனிலிலுங் காய்ந்து சுவாமி
மெத்தவருஷித்தமழை பனியால்நனைந்து ௨௬௮

இருப்பதுவைக் கண்டுமனம்வாடி-உமக்கு
யிவ்வுலகி லுள்ளவர்க ளெல்லோருங்கூடி ௨௬௯

சிறக்கவேகோவில்க ளமைத்து-உமக்கு
செம்பொன்மணி யாபரணம் விருதுகள்சமைத்து ௨௭௰

வடிவேல வாவென்று பெண்ணி-உம்மை
வரிசையிட்டு வைத்தார்கள் பிரதிஷ்டைபண்ணி ௨௭௧

அடியவர்கள் புண்ணியமீதையா-நீரும்
அழகானகோவில்களி லிருக்கிறதுமெய்யா உஎஉ

தேருமத கரிபரியுமிரவல்-உமக்கு
ஜெயமேளபேரிகையும் கோவில்களுமிறவல் உஎங

ஏறுமயில்வாகனமுமிரவல்-உமக்கு
யிட்டநவரத்தினமணியாபரணமிரவல் உஎச

இத்தனையுமுமக்கிரவல்தானே-குறவர்
இருப்பிடத்தைப்பழிக்கிறீரெண்ணுமல்வீணே உஎரு

வெற்றிவேலதுதானே சொந்தம்-உமக்கு
வேறேயொருஆஸ்த்திகளின் மேலென்னதொந்தம் உஎசு

மச்சமுனிமறைபொருள்களாலும்-உங்கள்
வங்கிஷவகுப்புகளைச் சொன்னரேகேளும் உஎஎ

மச்சாஞேமறையோரும் வேதன்-உமக்கு
வாய்த்தொருமாவஞே அளவளர்ந்ததாதன் உஎஅ

ஆத்தாளோபாளுருப்பறச்சி-அவளுக்
கருமையுள்ள தமையனையும்வளர்த்தவளுமிடைச்சி உஎகூ

காத்தாவோ மீன்காரக் கரவன்-உமக்கு
தளகர்த்தனவனும்நல்லகுலமறவன் உஅய

அரனென்றுமையீன்ற தய்யா-சங்க
மாண்டியல்லோசாதியிலே சொல்வார்கள்மெய்யா உஅக

வரமுறைகளில்லாத நாட்டம்-உங்கள்
வங்கிஷங்கள்தெரியாதோ பலசாதிக்கூட்டம் உஅஉ

இதற்குமுன்னேநானறிந்தாலும்-உமக்கு
இசைவேனேநீர்குட்டிக் கரணம்போட்டாலும் உஅங

அதர்க்கென்னசெய்யலாமையா-நாங்க
ளானுலுங்குரச்சாதியென்பதும்பொய்யா உஅச

பண்டாரம்நானென்று கத்தி-யெந்தன்
பாணெதிரே வந்தீரேயதுவென்னபுத்தி உஅரு

கொண்டுகுலம்பேசுவதுபேச்சோ-சுவாமி
கொய்ததினைமாவுக்கெனை கெஞ்சினதும்பேச்சோ ௨௮௬

பேருதெரியாமலுருமாறி-வந்து
பிசகுசெய்தமாதரியினாலேமதமீறி ௨௮௭

பாரமதயானையும்வராவிட்டால்-உமது
பாசாங்குக்குள்ளாகமாட்டேனில்லாவிட்டால் ௨௮௮

வழகியிந்தாடிகுறவஞ்சி-யென்று
வனவேடன்போல்வந்து யென்னெதிரேகெஞ்சி ௨௮௯

களையாகுதெனவந்துமுட்டி-நீரும்
காரியங்கொண்டபின்பேசுகிறீர்கெட்டி ௨௯௰

வலியநான்வந்தேதனேதொட்டு-நீரும்
வஞ்சகம்பேசுகிறீரிதுவென்னசெட்டு ௨௯௧

சலியாமல்நீருறுதிசொன்ன மொழிகள்
தவறுவரோகலிகாலமானாலுமென்ன ௨௯௨

பொன்னடிதுலங்கியயென்மாமி-பெற்ற
புண்ணியனேயனுதினமுமகலாமல்சாமி ௨௯௩

பென்னருகிலிருமென்று கேட்டால்-சுவாமி
யென்குலத்தைநீர்பழிக்கயுமக்குவிளையாட்டா ௨௯௪

வையகத்துக்கோர்க்காதுயென்னை-நீரும்
வஞ்சகமதாயிழுந்து பேசுவதுதன்னை ௨௯௫

தெய்வானையோசொல்லிவிட்டாள்-எந்த
சிறிக்கியுமக்கிவ்வளவுசூதுசொல்லிதொட்டாள் ௨௯௬

எப்படியோநானறியவில்லை-லோக
மெங்கும்நீர்போகாதவிடமொன்றுமில்லை ௨௯௭

இப்படியுமருந்திட்டதாரு-உமக்கு
யேலாதோ சொல்லவந்த மங்கையர்கள்பேரு ௨௯௮

வருந்திவிருந்தளித்தவளைச் சொல்லும்-அவளை
மயிர்பிடித்துகொண்டாறேன்சற்றேயிங்கேநில்லும் ௨௯௯

மருந்திடு மயக்கமில்லா விட்டால்-எனக்கு
பதில்சொல்ல மாட்டீரோ நானெதுவுங்கேட்டால் ௩௱

முருக்குவளை தாதிகளே வாடி-நம்ம
முத்துலிங்க சுவாமியேநீ கூட்டிவாபோடி ௩௱௧

*குருதுமருந் திடுபிசகு தோணும்-எந்தன்
கணவனெனுங் கந்தருக்கு கைபார்க்க வேணும் ௩௱௨

மின்னாரே என்றிவளுஞ் சொல்ல-எங்கள்
வேலரிது புதுமையெனக் கேட்டவருமெள்ள ௩௱௩

யென்னடிவீண் யோசனைகள் கொண்டாய்-நானும்
யெவள்வீட்டி லேயிருந் துண்ணதை நீகண்டாய் ௩௱௪

என்னுடைய சொல்வருதி மீறி-நீயும்
எதிர்பேசி னதினாலே யுன்னைநான்சீறி ௩௱௫

சொன்னவகை யல்லாது கண்ணே-சும்மா
தோகையே நானுமுனை பேசுவனோ பெண்ணே ௩௱௬

மயங்காதே நீவள்ளி மாதே-உந்தன்
மனமறியநான்சொன்ன தல்லாததிப்போதே ௩௱௭

ஜெயமாக நான்போய்வருவேன்-வள்ளி
தினமுமுனைப் பிரியாமல் தெரிசனமுந்தருவேன் ௩௱௮

உந்தனைவிட்டகல்வேனோ மானே-யென்று
யுபசாரஞ் செய்தங்கி ருக்கையிதானே ௩௱௯

கந்தனையுங் கோவிலுக்குளந் தேடி-அந்த
காணமல் தெய்வானை யம்மன்மனம்வாடி ௩௱௰

மங்கையரே சந்த்ரப்பிர காசன்-அந்த
மாணிக்க கெங்கைக்கு போனமுருகேசன் ௩௰௧

யெங்கேயென வேலவரைத் தேடி-நீங்க
ளிதுநிமிஷம் வரவேணு மென்றிடவேயோடி ௩௰௨

தாதியர்க ளெல்லோருஞ் சென்று-யெங்கள்
சண்முகவே லாயுதனைத் தேடினரன்று ௩௰௩

ஆதிசிவமாணிக்க கெங்கை-தீர்த்த
மாடவந்த வேலவரைக் கண்டீர்களோயிங்கே ௩௰௪
பதித்தபிறை நுதலழகி யாளே-அவள்தன்
பத்தாவைக் காணேனென்று தேடுவதினாலே ௩௰௫
கதித்தபுகழ் கொண்டமுனி வோரே-யெங்கள்
கந்தனையுங் கண்டதுண்டோ சொல்லுவீர்நீர் ௩௰௬
காணிக்கை கொண்டுவந் தோரே-எங்கள்
கட்டழகிதெய்வானை மணவாளனாரே ௩௰௭
மாணிக்ககெங்கைநீ ராட-யிங்கு
வந்தவரைக் காணீர்களோயினி யெங்கேதேட ௩௰௮
பாங்கியர்கள் நதியெங்குந் தேட-கோவில்
பணிவிடைக் காரர்தெரு வீதிவழிநாட ௩௰௯
ஏங்கியவர்தேடுவது கண்டு-சுவாமி
யெங்கோனுஞ் சிந்தையி லறிந்தன்புகொண்டு ௩௨௰
நினைவில்மறக் காததெய் வானை-யிந்த
நிமிஷவே கூட்டிவா வென்றேவுஞ்சேனை ௩௨௧
எனையழைக்க வேணுமென்றுதேடி-வாறூர்
ஏந்திழையே நான்போயிவரவும் விடைதாடி ௩௨௨
தாடியென்றுசொல்லவே திகைத்து-வள்ளி
தையலருஞ் சுவாமிதனைப் பார்த்துமேநகைத்து ௩௨௩
தேடிவந்தபேர்களைநா னடிப்பேன்-அந்த
தெய்வயானை வந்தாலு மேசண்டை பிடிப்பேன் ௩௨௪
என்னுடைய கணவனையுந் தேட-அவளுக்
கென்னவதி காரம்விடை கேழ்க்குகிறீரோடா ௩௨௫
மன்னவா யிதுவென்ன வென்றே-சொன்ன
வள்ளிதனை யுபசாரஞ் செய்தருகில்நின்றே ௩௨௬
யெனக்குரியமானேநீ கோபம்-இப்போ
யென்பேரில் வைக்காதே வீண்மனஸ்தாபம் ௩௨௭

உனக்குநான் பிசகுசெய் வேனோ-பெண்ணே
யோசனைகள் செய்யாதே நான்மறப்பேனோ. ௩௨௮

போய்வாறேன் வள்ளிதய வாக-யெனக்கு
புகழ்ந்துவிடை தாடிதெய்வானையிடமேக. ௩௨௯

வாய்திறந்து சொல்லுமன மகிழ்ந்து-யென்று
வடிவேலர் கேட்கவே வள்ளியுமுகந்து. ௩௩௦

மறைபுகழு கின்றவடிவேலா-சுவாமி
மனவருத்த மில்லாமல் போய்வாருஞ் சீலா, ௩௩௧

இறையவருக் குகந்தமக னாரே-யென்று
யிவள்சொல்ல வேலர்வழி கூடிநடந்தாரே. ௩௩௨

சித்திரவடி வேலவர் நடந்தார்-இங்கே
தேடிவந்த தாதியர்கள் கண்டடிபணிந்தார். ௩௩௩

வெற்றிமயிலோனன்பு கொண்டு-கோயில்
மேவியதெய்வானையையுங் கண்டெதிரேசென்று. ௩௩௪

மங்கையரே யெனைத்தேடு வானேன்-நம்ம
வள்ளியம்மை தன்னுடைய கோவிலுக்குப்போனேன். ௩௩௫

செங்கமலமாதேயென் கண்ணே-யிப்போ
தேடினது மென்னவகை சொல்லாயோபெண்ணே. ௩௩௬

தெய்வானை யென்றூர் துணிந்து-அந்த
தேவிசெவ் வேள்பாத மலரடிபணிந்து. ௩௩௭

வைபோக மானவடி வேலே-உடைய
மணவா உமக்குநித மிதுதானோவேலே. ௩௩௮

இளையாள்மே லிருக்குகிற பாசஞ்-சுவாமி
யென்பேரிலேனில்லை யுமக்குவிசுவாசம். ௩௩௯

அழையாத விருந்தோநீர் காணும்-வள்ளி
யவள்மனைக்கி நிதம்வலியப் போகவோவேணும், ௩௪௦

முழுக்கவே யும்மாலே யாச்சே-சாதி
முறைதவறிக் குறவருட சம்பந்தமாச்சே. ௩௪

இழுக்கான சாதியிலேகி-மாலே
யிட்டாலு மேன்மையது தவருவரோயோகி, ௩௪௨
அடிக்கடிநீ ரவள்மனைக்குப் போனல்-மெத்த
வலக்களிப் பாகவே சொல்லுவாளானல். ௩௪௩
குடிதனி லுயர்ந்தவளு மில்லே-வள்ளி
குறவர்குல மானதால் சொன்னேனென்சொல்லே. ௩௪௪
நிசமென்றுநீரெண்ணு வீரோ-உமக்கு
நேர்ந்ததுவும் வள்ளியுட போகமதவீரே. ௩௪௫
அசையாம லானந்த மீறி-வள்ளி
ஆசைகொண்டு பேசுகிறீர் நானுமக்குப்பாரி. ௩௪௬
யாகிநா னெடுத்ததென்ன கோட்டை-புவியில்
அறியாரோ நீரெனக்கு தேடிவருந்தேட்டை. ௩௪௭
தேகிமென வாண்டிபோ லானீர்-வள்ளி
தேவியவள் தினைமாவை தின்கவேபோனீர். ௩௪௮
திரிபுவனை யருள்பெற்ற பாலா-உமது
சித்தமதுவெப்படியோ கதிரைவடிவேலா. ௩௪௯
அரிமருக ரேயென் றுரைக்க-யெங்க
ளாறுமுகன் சொல்லுவார் தெய்வானைமெய்க்க. ௩௫0
மானேநான் உன்வருதி பெற்றேன்-பின்பு
வள்ளிதனை மாலேயிட்டு கூட்டிவந்துவைத்தேன். ௩௫௧
தேனேயென் மேற்பிழைக ளில்லே-உனக்கு
தெரியாதோ வீணில் பேசுவதுதொல்லே. ௩௫௨
கோவிலுக்கு நீபோடியென்று யெங்கள்
குமரேசன் சிம்மா சனத்திலேயென்று. ௩௫௩
சேவலொரு கையினி லிருக்க-யெங்கள்
சித்திரவடி வேலவரு மேகொலுவிருக்க. ௩௫௪
சூடதிவாரா தனைக்கி-வந்து
சூழ்ந்தவர்கள் கோடானு கோடியன்றைக்கி. ௩௫௫

அடியவர் பணிந்துதுதி பாட-கதிரை
ஆறுமுகன் மீதினில் கவிமாலைசூட ருடு௬

சிம்மா தனத்தினி லிருக்க-யெங்குஞ்
ஜெயஜெயென வந்தவர்கள் சூழவேபெருக்க ருடு௭

அம்மா பரஞ்சோதி பாலன்-நல்ல
அன்புடன் னருளுவா ராறுமுகவேலன் ருடு௮

துன்பவினை யணுகாமல்த் தானே-நீங்கள்
சுகமாக வாழ்வீரென் றெல்லவர்க்குந்தானே ருடு௯

தென்கதிரை வேலரருளாக-வந்த
தேவர்களு மனிதர்களுந் தங்கள்பதிக்கேக ரு௬௰

சித்தர்களும் வந்துநிதம் பணிய-யிந்த
செந்தமிழ் தனக்குதவி செய்சுப்பிரமணிய ரு௬க

கர்த்தனரு ளாலேகுறை யில்லை-ஆருங்
கதிர்காம மென்றாலும் வறுமைகளுமில்லை ரு௬உ

தேவர்களு முனிவர்களும் வாழி-யெங்கள்
திருமாலு மயனரனு முறையாளும்வாழி ரு௬ரு

நாவலரும் பாவலரும் வாழி-வள்ளி
நாயகன் மேற்கவியி தென்னாளும்வாழி ரு௬

புள்ளிமயில் வடிவேலும் வாழி-யிந்தப்
புவியெங்கும் நகரத்தார் புகழ்பெறவேவாழி ரு௬ரு

வள்ளிதெய்வானையுடன் மேவி-யோக
வாழ்வுபெறுங் கதிரேச னென்னாளும்வாழி ரு௬௬

# கதிரேசன் ஆனந்தக்களிப்பு

முற்றிற்று.





சிவமயம்.

# கதிர்காமத்துஊசல்,

சீர்வளருங்கதிரை நாதன்மேல்சிந்துபாட
சித்திவினாயகனை யெண்ணியே-வாலை
சத்திசிவனைத்துதி பண்ணியே ௧

சத்திசிவனருளும் வெற்றிவேலவர்மலர்த்
தாளிணைதன்னைமற வேனே-கந்த
வேளெனுமெங்கள்முரு கோனே ௨

கோனெனுமிந்திரனுந் தேவருந்துதிசெய்யுங்
கும்பன்குருவைப்பணிந் தேற்ற-வெகு
யின்பமுடனேகதை வாழ்த்த ௩

யின்பமுடனேவரு மன்புள்ளதோழியரே
யெங்குலதேவனருள் சேரும்-இந்த
தென்கதிர்காமமதைப் பாரும் ௪

தென்கதிர்காமமென்றால் யெங்கும்பிரகாசமாக
சேவல்க்கொடிதுலங்கு தேதையா-யிந்த
மாவளமாநகரில்த் தானையா ௫

மாவளமானயிந்த மாநகர்தன்னில்வள்ளி
மங்கைக்கிசைந்தமுருகோன் பெண்ணே-வேல
ரிங்கேயிருக்கிறார் தான்கண்ணே ௬

இங்கேயிருக்கிறவர் செங்கைவேலவரென்றால்
யிந்தமதகரிமேல்ப் பாரையா-மேவி
யந்தாபவனிவாற தாரையா ௭

அந்தாபவனிவரும் கந்தன்பன்னிருகையன்
ஆனைமேலேறிவரு வோரடி-தேவர்
சேனைசேனாதிபதி தானடி ௮

சேனாதிபதியிவ ரானைமேலேறிக்கொண்டு
தெருவில்பவனிவரும் லோலனே-வெகு
அருமையாயீன்றவளார் வேலனே ௯

அருமையாயீன்றவளுந் திருமாலுடன்பிறந்த
ஆத்தாளெங்கள்பரமேஸ்வரி-கைலை
காத்தாளேமங்கைமங்க ளேஸ்வரி ௰

காத்தாளேசெங்கைவேல னாத்தாளிவரென்றீரே
கயிலாசநாதர்க்கிவ ளாரு-யெனக்
கொயிலாகசொல்லுமறு சீரு ௰௧

ஒயிலாகயீஸ்பரியுங் கயிலாசநாதருக்கு
உத்தமிசொந்தமனை யாளடி-வாலை
சத்திசிவனென்பார்கள் கேளடி ௰௨

சத்திசிவனையவர் பெற்றிடும்ரதிபதன்
தான்வந்தெதிர்த்தென்ன சீரையா-சிவன்
ஏனவர்தன்னையெரித் தாரையா ௰௩

ஏனெரித்தாரென்றுயே மானேயுடையவர்மேல்
யேதுக்குப்பாணமதனே னெய்தான்-சிவன்
வாதுக்கனலாகவேதான் செய்தான் ௰௪

வாதுக்கெதிர்த்துவந்த போதுவிஜையன்வில்லை
வாங்கிசிவனையடித்தே வைதான்-சிவன்
தாங்கியருளவர்க்குயேன் செய்தான் ௰௫

தாங்கினதுதவத்தா லோங்கியபார்த்தனெனுந்
தானேபொறுத்தாரருள் சிந்தையார்-இந்த
ஆனைமேல்வாறகந்தன் தந்தையார் ௰௬

ஆனைமுகமும்பெரும் பானைவயறிலங்க
அந்தாயிருக்கிறாரே பாரையா-ஒரு
தந்தமிலங்கியவ ராரையா ௰௭

தந்தமது துலங்க வைந்துகரமிலங்க
தனியேயிருக்கிறவர் தான்பெண்ணே-வள்ளிக்
கினியகுமரன் தமை யோன்கண்ணே ௰௮

இனியகுமரனையும் கனிவாய்வளர்த்தெடுத்த
யீசனுக்குயிந்தப்பிள்ளை யேனோ-தந்தி
வேஷமெடுக்கவிதி தானோ ௰௯

வேஷமெடுத்துகண் டேசியவள்ளியஞ்சி
வேளனுங்கந்தனைக்கொண் டாடினாள்-ஒரு
தாழ்வன்றிமாலையிடக் கூடினாள் ௨௰

தாழ்வன்றியேபுவியில் வாழ்வுமிகுந்தகந்தன்
சங்கையில்லாமல்கெஞ்சி நேரே-குற
மங்கையைக்கூடிக் கொஞ்சினாரே ௨௧

மங்கைகுறவருட தங்கையல்லடிபெண்ணே
வந்தபகவன்முனி வேண்டி-ஆதி
சொந்தமாய்ப்பெற்ற வள்ளிதாண்டி ௨௨

சொந்தமாய்வேலனுக்கு யிந்தவள்ளிக்குமுன்னே
சூட்டவில்லையோமண மாலை-திருப்
பூட்டவில்லையோபுவி மேலே ௨௩

பூட்டவேதெய்வானையைக் கேட்டுமுன்னாளையிலே
பூமணஞ்செய்தாரடி வேலன்-ஆழி
வாமணன்தங்கையருள் பாலன் ௨௪

வாமணனேமஞ்செய்து நேகமமாய்மாலையிட்டு
வந்தவர்வட்டக்குடை மின்ன-யிந்த
தந்திமேலேறிவாற தென்ன ௨௫

தந்தியிலேறிவார திந்தத்திருவிழாவின்
சங்கையதுதானடி கண்ணே-சுவாமிக்
கிங்கேவளமையிது பெண்ணே ௨௬

இங்கேவளமையென்று லெங்கும்பகலைப்போலே
யிருபுறமுஞ்சனங்க ளேந்தியே-கொண்டு
வருகிறதீபமென்ன காந்தியே ௨௭

காந்தியுனேகைமி லேந்திக்கொண்டாடிசிலர்
கர்ப்பூரதீபமதைத் தூண்டி-வாறார்
சுப்பிரமணியனுக்கே தாண்டி ௨௮

தாண்டியுபசரித்து வேண்டியதர்மஞ்செய்ய
சத்திரங்கட்டிவைத்த தாரையா-வேலே
சித்திரயானதைப் பாரையா ௨௯

சித்திரமான்வன்ன சத்திரங்கட்டிவைத்தோர்
செந்தமிழ்சேர்நகரத் தாரடி-வைத்தோர்
நந்தவனத்தைச்சுற்றுப் பாரடி ௩௰

நந்தவனமும்வைத்து சொந்தமடங்கட்டிய
நகரந்த்தாரென்றாலவராரு-அவர்
புகழ்பெற்றிருப்பதெந்த வூரு ௩௧

ஊரெனும்பாண்டிதேசத் தாரெனும்பேர்புகழ்ந்து
ஓங்கியதொண்ணூற்றூறா ராரடி வெகு
பாங்குள்ளநாட்டுக்கோட்டையாரடி ௩௨

நாட்டுக்கோட்டையாரென்றால் வாட்டமில்லாதலங்கை
நாட்டுக்குவந்தவகை யேதையா-புகழ்
தீட்டும்நகரத்தார்கள் தானையா ௩௩

தானையாவென்றுசொன்ன மானேகொழும்பினிலே
சந்தோஷமாகவேயா பாரமுஞ்-செய்ய
வந்தவர்களிவரென் னேரமும் ௩௪

என்னேரமுங்கொழும்பில் சொர்ன்னயாபாரஞ்செய்தால்
யிந்தக்கதிர்காமத்தை நாடியே-யிவர்
வந்ததென்னபுகழ்கள் பாடியே ௩௫

பாடியேவேலெடுத்து ஆடிக்கொண்டாடிமாதப்
பௌரணைக்கேவரு வாரடி-யிங்கே
வருஷங்கள்தோறும்வெகு சீரடி ௩௬

வருஷங்கள்தோறுமிங்கே வருவாராணாலுஞ்சொந்த
மானகர்க்கேகிறலைப் போதுகாண்-யிங்கே
தான்வேலெடுத்துவார தாருகாண். ௩௭

ஆருகாணென்றாய்புக ழேரும்புதுக்கணக்குக்
காகவந்தநகரத் தார்கள்-வெகு
சேகரமாகவரு வார்கள். ௩௮

சேகரமானகன யோகரெனுமிவர்கள்
செல்வமுகுந்தவரோ தோணும்-நல்ல
கல்விமிகுந்தவரோ காணும். ௩௯

கல்வித்திறமையுண்டு செல்வமகிமையுண்டு
கந்தனருளைப்பெற்றபேருக்கே-வெகு
விந்தையாய்நாட்டுக்கோட்டை யாருக்கே. ௪0

நாட்டுக்கோட்டையாருக்கு நீட்டும்புகழ்படைத்த
நகரத்தாரென்றிவரைத் தானையா-யெங்கும்
சகலபேர்களும்சொல்வ தேனையா. ௪௧

சகலயாபாரதர்மஞ் சகலதிருப்பணியும்
தவறாமல்ச்செய்துவந்த தோதினால்-புவியி
லிவரேநகரத்தாரென் றோதினர். ௪௨

இவர்களைப்போலனேகர் யெவளவோதர்மஞ்செய்தார்
யேனையாகாணுமந்த நாளில்லை-அப்போ
தானவர்ச்கந்தபே ரேனில்லை ௪௩

பேர்புகழ்சரிகைகிரிகை நேருங்கருகனருளும்
பெற்றதினால் நகரத்தாரே-யென்று
யெத்தலத்திலுமுரைத்தாரே. ௪௪

எத்தலத்திலும்புகழ் பெற்றமதுரைச்சொக்கர்
யிருக்குங்கோயிலையெல்லாந் தானையா-பொன்னால்
சிறக்கவலங்கரித்த தாரையா. ௪௫

ஆரென்றாய்பெண்ணேயெங்கும் பேறானதென்மதுரை
ஆலயத்தைப்பிடித்த தாரடி-வடி
வேலனருள்நகரத் தாரடி. ௪௬

வேலனைப்பெற்றசத்தி வாலைசிவகாமித்தாய்
மேவுஞ்சிதம்பர நடேசனார்-சபை
யாவம்புதிபிக்கிற தாரையா ௪௭

புதிப்பிக்கவேணுமென்று மதிப்பித்துகந்துசெய்தார்
குவியில்ப்புகழ்நகரத் தாரடி-முகில்கள்
குவியுந்தன்மைபோல்கொடையாரடி. ௪௮

கொடையார்கள் தர்மஞ்செய்ய சடையாரோவாணிபத்தில்
கூடும்முயர்ச்சியுள்ள வாழ்வுளோர்-புகழ்
நாடும்வேதாகமத்தின் கேள்வியோர். ௪௯

நாடுமயோத்திகாசி ராமேஸ்வரம்வரைக்கும்
நகரத்தார்தர்மங்கிலே நாட்டினார்-நித்தியம்
சுபஜெயமங்களத்தைச் சூட்டினார் ௫௰

சூட்டியவர்க்கருளைத் தீட்டியவேலவர்மேல்ச்
சொன்னகவியெங்கும் பிரகாசம்-ஓகோ
மன்னவருமக்கெந்த தேசம். ௫௧

தேசமென்பதுராமன் சேதுபந்தனஞ்செய்த
சீமான்திருப்புல்லாணிதானடி-தங்கம்
ராமசாமியென்பது நானடி. ௫௨

நானடிக்கந்த நாதனைப்பணிய
நல்லதினங்களெப்ப காணும்-அதைச்
சொல்லநாமிங்கேவரணும் ௫௩

சொல்லக்கேள் சுக்கிரவாரம் சோமவாரங்கள்மாதம்
தோதானகார்த்திகைக்கித் தானடி-வந்தால்
பாதகங்களகன்று போமடி ௫௪

பாதகந்தன்னைப்பரி காசமேசெய்யுங்கந்தன்
பாதந்தன்னைப்பணிய வேணும்-நாங்கள்
காதல்கொண்டேவருவோம் காணும் ௫௫

காணுந்தவமிருந்து கதிரைப்பதியுகந்த
கந்தன்செந்தூரில்வளர்யோகண்டி-நல்ல
தொந்தமிட்டாடியில் வாகனண்டி ௫௬

வாகன்செந்தூரானென்றால் வையாபுரிபழனி
மாமலைமேலிருப்ப தாரு-நல்ல
சாமிமலைக்குகந்த தாரு, ௫௭

சாமிமலைமுதலாய்ப் பூமிதனிலுமுள்ள
தலங்களெல்லாமிவர் தாண்டி-மேவி
விளங்குகதிரைப்பதி யாண்டி, ௫௮

ஆண்டிக்கில்லுலகெல்லாம் வேண்டியபதியென்றான்
அத்தலங்களிலெது காணும்-இவர்
சித்தம்வைத்திருப்பதெங்கோனும் ௫௯

சித்தம்வைத்திருப்பது முத்தனெனுமடியார்
சிந்தையைவிட்டகல மாட்டார்-மாயன்
செந்திருவாழ்கதிரை நாட்டார் ௬0

நாட்டாரடியவர்மேல் நாட்டமாயிருந்திட்டால்
நாட்டுப்பதிகளில் ச்ல்செவாரோ-நாமும்
கேட்டவரங்கள்தரு வாரோ. ௬௧

கேட்டவரந்தருவார் நாட்டுப்பதியில்செல்வார்
கேசவன்தன்மருக ஞர்க்கே-யெண்ணி
வாசமாய்நம்பிநந் தோர்க்கே. ௬௨

வாசமுடனேகதிரேசனைத்தொழுதிட
வாருமையாபுகழ லாலி யினி
கூறும்ஜெயமங்கள வாழி. ௬௩

வாழுகதிரேசனும் வாழிவள்ளிதெய்வானை
வாருயடியவர்கள் வாழி-யெங்கள்
மேழிக்கொடிக்குலமுவாழி. ௬௪

கதிர்காமத்துவசல்

முற்றிற்று.



உ

சிவமயம்.

# கதிர்காமக்கும்மி.

சீர்வளம்பெற்ற குயில்க்கூவும்நல்ல
        தென்கதிர்காம பதில்மேவும்
ஆறுமுகன்கதி ரேசனுமேலெங்கள்
        அண்டர்கொண்டாடிய வாசனுமேல். க

மங்களம்சேரும் கும்மிப்பாடவந்து
        பர்ணிக்கப்பிள்ளை யார்காப்பாட
சிங்கத்திலேறிய பூரணியேயெந்தன்
        செந்தமிழ்க்கேயருள் நாரணியே. உ

சுந்தரநீறணி ஆறுமுகன்மீதில்
        சொல்லுந்தமிழுக்கு நாலுமுகன்
சிந்தைக்கிசைந்தவ ளைவாழ்த்திக்கவி
        செப்பும்புலவர்க ளைப்போற்றி. ௩

சந்தோஷபாக்கும்மிப் பாட்டுரைக்கக்கந்தன்
        தையல்தெய்வானையு மேசிறக்க
அந்தகவிசெய்ய வேணுமப்பாநானும்
        வாழ்த்துங்கவிபாலே பூஜுமப்பா. ௪

கந்தன்கதிர்காம வேலனேபுவி
கார்க்குமறைமுதலோலனே
யெந்தனுக்கேயனு கூலனேதொழு
தேத்திப்பணியவும் சீலனே. ௫

மங்கையரெல்லோரும் வாருங்கடியிந்த
மாணிக்கசெங்கைநீ ராடுங்கடி
சிங்காரமாய்ப்பணி பூட்டிக்கொண்டுமுகம்
சிறந்தகுங்குமம் தீட்டுங்கடி ௬

கூந்தலுக்கேமலர் மாலைகட்டிநல்ல
கோலவர்ணப்பட்டுச் சேலைகட்டி
சேர்ந்திணையாகவே பாடுங்கடிகந்தன்
சேவடிபோற்றிக்கொண் டாடுங்கடி. ௭

ஐயமில்லாமலே நாடிவந்தயிந்த
ஆறுமுகன்பதி தேடிவந்த
செய்யிழைமார்களே வாருங்கடிகவிச்
சிறப்பைச்சொல்லுறேன் கேளுங்கடி. ௮

ஓதியசெந்தமிழ்ப் பாடவேயிந்த
ஊர்வளஞ்சொல்லிக்கொண் டாடவே
யேதுபிழைக ளிருந்தாலும்சுவாமி
ஏழைக்கிரங்கி யெனையாளும். ௯

ஆறுமுகமென்று பேருடையானெனை
யாளும்கதிர்காமத் தூருடையான்
சீருடையான்வடி வேலுடையான்வெகு
சித்தர்கள்போற்றிய காலுடையான். ௧௦

சத்திக்குகந்த மகன்தானேயிவர்
தந்தையும்முக்கண் சிவன்தானே
யெத்திசையும்புகழ் மால்மருகன்றனை
யேத்திக்கொண்டாடலாம் வாருங்கடி. ௧௧

வாசம்புகழ்கதிர் காமத்திலேமழை
மாரிபெய்யவுஞ்சந் தோஷத்திலே
ஆசைமிகுந்துழ வேத்தினர்சென்னல்
அள்ளிவயலெங்கும் தூத்தினர். ௧௨

சென்னல்களெல்லாம் விளைந்திருக்குமெங்கும்
சிங்களநாடு மகிழ்ந்திருக்கும்
கன்னல்தழைத்தெங்கும் முத்தீனும்பூங்
காவுகளெல்லாம் வளர்ந்தோனும். ௧௩

மாவுங்கொய்யாவு மடர்ந்திருக்கும்புன்னை
மரம்பிலாவுந் தொடர்ந்திருக்கும்
கூவுங்குயில்மயில் கூட்டமும்வெகு
குஞ்சரங்களெங்கும் நாட்டமும். ௧௪

கானகத்தில்மயில் ரொம்பவடி புலி
கரடிமான்மரைக் கும்பலடி
வானரங்கள்விளை யாடுவது மெங்கும்
வண்டுகள் கீதங்கள் பாடுவதும். ௧௫

மாணிக்ககெங்கையா ரோடுவதும்நிதம்
மாதவர்வந்துநீ ராடுவதும்
காணிக்கைகொண்டு வருவாரேகதிர்
காமத்தைநோக்கி வெகுபேரே. ௧௬

வீதியலங்கார மெத்தவடியிதில்
மேவுஞ்ஜனங்களும் சுத்தமடி
சோதிமயமான கோபுரமுங் கோவில்
சூழ்ந்ததிருமதில் தாவரமும். ௧௭

குமரன்கோவி லிலங்குதுபாரிதில்
கொட்டியமேள முழங்குதுபார்
அமரர்கூடிய கூடமும்வள்ளி
யம்மைதெய்வானைக்கி மாடமும். ௧௮

என்னசொல்வேன்கதிர் காமத்தைகோவி
லிலங்கியவலங் காரத்தை
சன்னிதிகாவலும் சிங்களவர்கோவில்
ஸ்தானிகராவதும் சிங்களவர். ௧௯

நன்னகரெங்கிலும் சிங்களவர்கோவில்
நாட்டியக்காரரும் சிங்களவர்
மன்னரசுக் குரித்தவர்கள்விட்ட
மானியங்கள்ரொம்பப் பெற்றவர்கள். ௨0

புத்தமதத்தி லுகந்தவர்கள்கந்தன்
பூசையில்சித்த மிருந்தவர்கள்
சித்தமும்சிங்களர் கூடுவதுமிவர்
நேர்ந்துபணிந்துகொண்டாடுவதும். ௨௪

தெய்வானைக்கேத்த மலர்கள்கொய்வார்லாட
தேசசன்னியாசிகள் பூசைசெய்வார்
வைபோகமிப்படி யுள்ளதடிஸ்தல
மகிமையைச்சொல்ல நல்லதடி. ௨௨

யெண்டிசைதோறும் புகழ்வாசன்கொழும்
பெங்கும்சிறந்த கதிரேசன்
கண்டியில்மேவிய தீரனடிகந்தன்
காலாரிகக் கொடி வீரனடி. ௨௫

செங்கைவேல்வில்லையும் பெற்றவண்டிஅந்த
தென்னிலங்காபுரி மெய்த்தவண்டி
சிங்காரமாகிய வேலனடி அவர்
சிறப்பைநான்சொல்லக் கேளுங்கடி. ௨௪

சிறப்பைச்சொன்ன வரேகாணும்அந்த
தென்னிலங்கை யென்பதுதானும்
யிருப்பதெந்த விடங்காணும் அதற்
கெப்படிப்போனல் தடந்தோணும். ௨௫

கண்டிகொழும்பு மிருப்பதெங்கேயிந்த
கார்கடல் மத்தியிற் தீவுமிங்கே
உண்டானகாரணந் தானுமையா அந்த
உண்மையைச் சொல்லவும் வேணுமையா. ௨௬

சொல்லுகிறேன்கேளடி பின்னேதேவர்
சொன்னசபதத்தால் முன்னலே
வெல்லவே மாருதம் விசையிலேதள்ள
மேருமுடியிந்தத் திசையிலே. ௨௭

வந்துவிழுந்த யிமாமசுயிந்த
வாரிக்குமேலே திடலாச்சு
உத்திக்கமலத் துதித்தவருங்கண்டு
உள்ளத்திலெண்ணி மதித்தவரும் ௨அ

ஏழுநூற்றுக்கோட்டையாக்கியே யிதர்க்
கிலங்கையெனும் பேர்தாக்கியே
ஆளுமென்றுமன நற்பாலேசொல்லி
ஆண்டதுபோனுக் கிப்பாலே. ௨௯

ராணுவத்தோடே ஜெயம்பூண்டான்மன்னன்
ராவணன்தென்னிலங்கை யாண்டான்
போனதிரையதா யுகத்திலேவந்த
பொற்கொடிசீதையை வனத்திலே ௩௰

கண்டுசிறையெடுத் தோடிவந்தான் ராமன்
கவிப்பட்டையுடன் தேடிவந்தான்
நின்றுகடலைக்கண் டேதிகைத்தானந்த
நேரம்வருணனையு மழைத்தான், ௩௧

சீதையினாலே மனமுகந்து ராமன்
தெர்ப்பசயன மதிலிருந்து
ஆதிசேதுவெனப் பேர்பொருதிக்கன்னி
யாகுமரியெல்லை கண்டறுதி. ௩௨

பரப்பிலேபத்து யோசனையாய்கவிப்
படைமலைகொண் டதர்க்கிணையாய்
உரத்துயோசனை நூறுமட்டும்-அனை
உண்டுபண்ணிலெங்கைக் கோட்டைமட்டும். ௩௩

நடந்துலெங்கையைக் கண்டபின்புராமன்
ராவணனைக்கொன்று சென்றபின்பு
அடர்ந்தராக்ஷதக் கும்பழியத்திரு
வணைசிதறுண்டு தான்மறைய. ௩௪

பின்னுலிலங்கையைச் சீராக்கித்தவப்
பெருமையால் கொஞ்சம்பேராக்கி
அன்னாள்விபூஷண னாண்டுவிட்டார்
அண்டருலகத்தைச் சார்ந்துவிட்டார். ௩௫

நாட்டமுள்ளகயல்க் கண்ணளேலெங்கை
நகரம்நாள்ச் சென்றுபின்னலே.

கோட்டையழிந்துகடலாச்சுயிது
கொஞ்சமாய்த்தீவிங்கே துண்டாச்சு ௩௬

அப்பாலித்தீவுசீரில்லாமல்யிதில்
ஆளொவொரு வருமில்லாமல்
ஒப்பாதகாடு மலையாச்சுபெரு
யோர்களுலாவு மிடமாச்சு. ௩௭

நயமிகுந்த பெருங்காடுவெகு
நாளாயிருந்ததின் பிற்பாடு
யியக்கரென்றொரு ராக்ஷதனும்யிதில்
யிருந்தரசிட்டான் ஏச்சவனும். ௩௮

நந்தியோநாகர் சிலகாலப்பேல்
நாட்டையுமாண்டு வருங்காலம்
புத்தரும்வந்திதில் நாடினார்சிலர்
புத்தர்மதத்தைக் கொண்டாடினார். ௩௯

திசைபுகழ்வங்க தேசாதிராஜன்
சிங்கவாகுபெத்த ஞாயாதி
விஜையராஜனும் வந்தாண்டிபூமி
விஸ்தாரங்கண்டு மகிழ்ந்தாண்டி, ௪௰

தலைமன்னாரென்று பேட்டைகட்டிராஜன்
தம்பண்ணாடென்று கோட்டைகட்டி
சிலைவளமையைக் கொண்டாடக்கண்டு
தென்னனியக்கர் மகள்கூட. ௪௧

செப்பமுடனிதை யாளவந்தான்வங்க
தேசத்ததிபன் மகனிவன்தான்
அப்பாலித்தீவுக் கரசரடிவந்து
ஆண்டவர்கள் வெகுபேர்களடி. ௪௨

வங்களர்சிங்களர் வெள்ளாளர்யிந்து
மதசமையத்து வல்லாளர்
யிங்கேவந்துகுடி யேறினார்யிதர்க்
கிசைந்தரசருமீறினார். ௪௩

சிங்களப்பாஷைபு பேலாச்சுயிதில்
சிவசமையமு முண்டாச்சு

மங்கையரேசில ராஜாக்கள்புத்து
    மதசமையத்தை மேலாக்க. ௪௪

பாண்டிசோழதேசத் தீரர்களும்வந்து
    பட்டமாண்ட மூடிவீரர்களும்
வேண்டியகேட்டைகள் கட்டிக்கொண்டார்பாதம்
    வேறுசெய்யசண்டை யிட்டுக்கொண்டார் ௪௫

பாவையேயெங்கும் நகராச்சுநல்ல
    பாருலகத்திலே பேராச்சு
மேவும்சிவஸ்தல மெத்தவுண்டுயந்த
    விஸ்தாரஞ்சொல்லவு முத்தியுண்டு. ௪௬

உன்னிதமான மலையுமுண்டுஇதில்
    லோங்கும்சிவனடி பாதமுண்டு
முன்னீஸ்புரம்வெகு முக்கியமாம்அதில்
    மூலகணேசன் சிலாக்கியமாம் ௪௭

கேட்டவர்க்கே யனுகூலமாம்திருக்
    கேஸ்புரமென்றொரு தானமாம்
நாட்டமுள்ளநகு லேஸ்புரமாம்சிவ
    நாதனுகந்த கோணேஸ்புரமாம் ௪௮

தண்டேஸ்புரம்வெகு தகுதியாம்ஐயன்
    சாத்தாக்கோவிலொரு பகுதியாம்
எண்டிசைமொய்த்த குமரபுரம்புக
    ளிலங்கும்சந்திர கேசபுரம். ௪௯

கண்டவர்மெய்த்த மாவிட்டபுரம்ராஜ
    கர்த்தரால் செய்ததனேகபுரம்
தொண்டர்துதிக்கும் தலங்களிதாம்யின்னம்
    தோணுதிருப்பதனேக மதாம். ௫௰

ராமேஸ்புரமிதைச் சேர்ந்ததடிமுன்னே
    ராமனுதனு லமைந்ததடி
பூமிக்குருத்தானமன்னர் மெத்தபட்டம்
    பூண்டரசிட்ட நகரமெத்த ௫௧

கண்டியென்றும் கோட்டைக்காடிதென்றுநல்ல
கழனிநீர்கொழும் பூரிதென்றும்
அண்டியவூரெல்லாம் கட்டடமாம்கோட்டை
அனுராஜ புரப்பட்டணமாம் ருஉ

முத்துச்சலாவத் துறையுமுண்டுகடல்
முழுகிச்சங்கு குளிப்பதுண்டு
ரெத்தினபுரியென்று ஊருமுண்டுயதில்
ரெத்தினமணிகள் விளைவதுண்டு. ருங

பன்னகாமம் தும்சைறநாடாய்பாழ்ப்ப
பாணப்பகுதி வெகுநாடாம்
இன்னமிருக்குதனேக மெல்லையிப்ப
யெனக்குச்சொல்லச் சமையமில்லை. ருச

கண்டவிடமெல்லாமூராச்சுகோவிலில்
கட்டியக்கட்டடம் பேராச்சு
திண்டுமுண்டாப்பளி கொண்டார்கள்நல்ல
சிங்களரோடர சாண்டார்கள். ருரு

கண்டியையாண்டிடும் வீரதுங்கன்யிதில்
கட்சிவிக்ரம ராஜசிங்கன்
தண்டிகையேறிய சூரர்களும்யிவன்
தலைமுறைவரை ராஜர்களும் ருசா

தொண்ணூத்தாறுமுடி மன்னரடி-அதைச்
சொல்லுஞ் சரித்திரமின்னபடி
விண்ணவர்மெய்த்திடு மானகரில்யிதில்
மேவியரசிட்ட பேரவரில். ருஎ

கண்டியரசனும் பின்னாலே அவன்
கட்டடர்காணலாம்கண்ணாலே
வண்டனதியாய்க் காரணடிஅவன்
வம்மிஷம் நாயக்கராஜனடி. ருஅ

அதற்குமுந்தியராஜர் தொடுக்கட்டி
ஆண்டவிடமெல்லாம்சீருகெட்டு
மதிப்பதாக்கிடந் தோணுபல்க்காடு
மூண்டியிருப்பதுட் தானபீடு ருகூ

இங்கிர் தன்வீரத்தில் வீரசிங்கன்யிந்த
இலங்கைநாடெல்லாம் ராஜ்ஜியங்கள்
சங்கையுடனரசாளையிலேசிலை
தன்னிலிருந்தந்த வேளையிலே, (௬௰)

சிங்காரக்கப்பலில் பறங்கியேயிந்த
தீவுக்குள்ளே வந்துயிறங்கியே
தங்கச்சிகரம் தனைவகுத்துப்புத்தா
தாவுங்கழனித் திசையடுத்து. (௬௧)

கோட்டையுங்கட்டிக் கொடிபூட்டியந்தக்
கொழும்பனென்றுசொல்லி பேர்நாட்டி
வேட்டெழுப்பிக்காலிக் கோட்டைகட்டிநல்ல
விஸ்தாரமாத்திர பேட்டைகட்டி. (௬௨)

தொட்டதிருக் கோணமாமலையும்அந்த
துறைமுகங்களை யாண்டதையும்
ஒட்டாமல்தள்ளி விலாவாகவந்து
உலாந்தாக்காற் ருசாராக. (௬௩)

ஆண்டுசிலகாலம் விட்டார்கள்பின்பு
ஆங்கிலேயர்வந்து தொட்டார்கள்
வேண்டியதர்மம் நிலைநிறுத்தயிந்த
மேதினியை யெல்லாம்சீர்திருத்த. (௬௪)

கும்பனியார்வந்துஒட்டிக் கொண்டார்யிந்த
கொழும்புகோட்டையைக் கட்டிக்கொண்டார்
வம்பானகாட்டையும் வெட்டலுற்றார்கோடு
வங்களாக்கச்சேரி கட்டலுற்றார். (௬௫)

கண்டியரசனைக் கெடுத்திட்டார்பெருங்
கள்ளர்களைச்சுட்டு யழித்திட்டார்
வண்டிக்கிறோட்டுகளுண்டுபண்ணியிதில்
மாகாணங்களாய்த் துண்டுபண்ணி. (௬௬)

துறைமுகங்களை நேராக்கிகாப்பித்
தோட்டங்களை யெல்லாம்சீராக்கி
நிறையயிந்தியாச் சனங்களும்பெருகு
நிறைந்ததீர்வைப் பணங்களும். (௬௭)

மின்னல்வேகங்கொண்ட தந்திவைத்தார்தேசி
விளம்பும்ஆபிசை முந்திவைத்தார்
என்னசொல்வேனடி மின்னரசேயிந்த
இங்கிலீஸ்க்காரர் தன்னரசே. (௬௮)

பூட்டிறயிலையும் நடத்தினர்யெங்கும்
புகைவிளக்கையும் பொருத்தினர்
தாஷ்டிகமான கடலலைக்கிபூடே
தடுத்தணைகட்டியே நெருக்கி. (௬௯)

தாண்டவளர்ச்சூட்சம் வைத்தாரேமலைத்
தண்ணீரைவடவென் றழைத்தாரே
மண்டலத்தில்புகழ் பெற்றதடிகப்பல்
வாறதனேகமாய் நித்தமடி. (௭௰)

தண்டமிழ்சேர்புவி மெய்த்தவளாம்பிந்தி
சக்கரவர்த்திப்பட்டம் பெற்றவளாம்
லண்டனரசாட்சியைச் செலுத்தும்மகா
ராணிகட்டளைப்படி நடத்தும். (௭௧)

இங்கிலீஷ்காறரா லேயல்லோநம்ம
இந்தியாவும் லெங்கைத்தீவுவல்லோ
கங்கையும்சிங்கார முண்டாச்சுவெகு
தாழ்வில்லாவாழ்வுக ளுண்டாச்சு. (௭௨)

பூமியில்கள்ளர் பயம்போச்சுவெகு
புத்தியும்வித்தையு மேலாச்சு
சாமிகதிரேசன் தன்னருளால்ஒரு
தாழ்வொன் றுமில்லையே தோழிப்பெண்ணே. (௭௩)

தாழ்வில்லாத்தண்மை யுடன்வாழும்கவி
சாற்றியமன்னவ ரேகேளும்
ஆழுங்கதிரேச னித்தலத்தில்வந்த
ஆரம்பத்தின்கதை சொல்லுமம்மா. (௭௪)

ஆரம்பமென்ன புராணத்திலேகதை
அறிந்தமட்டுமின்னேரத்திலே
கூறவுங்கேளுங்கோ பெண்ணாரேவர்ன்ன
கோலவிழிக்கயல்க் கண்ணாரே. (எ௫)

அண்டமெல்லாமொரு தகத்திலேகட்டி
ஆண்டகிரேயதா யுகத்திலே
கொண்டரசாட்சியைச் செலுத்தியேதேவர்
கோனைவெருட்டியே கொளுத்தியே. (எசு)

பாரவிணைமளுக் கொஞ்சாதவெகு
படைப்பெருக்கத்துக் கஞ்சாத
வீரப்பிரதாப மிகப்பூண்டமன்னன்
வீரமயேந்திர புரமாண்ட. (எஎ)

வாசமுள்ளசூரநாளையிலே அவன்
வந்துபோர்செய்திடும் வேளையிலே
பாசறைவீடு மிதில்த்தாண்டிகந்தன்
படைப்பெருக்க மிதில்த்தாண்டி, (எஅ)

குன்றெனும் சூரரைத்தாக்கினர்தேவர்
கோனுக்கரசை யுண்டாக்கினர்
அன்றுமுதல்கந்தன் வாசமடியிதில்
அண்டர்களும் விசுவாசமடி. (எசு)

காமன்மைத்துனனைத் தொண்டுபண்ணிகதிர்
காமமென்றேபேரை யுண்டுபண்ணி
மாமுனிவோர்கள் கொண்டாடிவந்தநம்ம
வள்ளிமணாள னிவன்தாண்டி. (அய)

மன்னவரேகவி சொன்னவரேயிங்கே
வாருமையா சொல்லக்கேளுமையா
மின்னியவேலவ னைவழ்த்தமுறை
விளங்கச்சொல்லும் பணிந்தேற்ற. (அக)

விளங்கும் தீப தெரிசனமும் தவில்
மேளம்தவண்டை முரசினமும்

முளாங்கும்சன்னதி முன்பாகச்சென்று
மூலஸ்தானத்தைப் பாருங்கடி. (அ௨)

மூலஸ்தானந் தெரியாமேசபை
முன்னஸ்தபண்டபம் தோணுமே
சீலமிருகந்தன் சன்னதியிலிட்ட
திரைமறைப்பிங்கே யோதுக்கையா. (அ௩)

திரைமறைப்பு வளமையடிகந்தன்
சேவடிகாண்ப தருமையடி
முறைதெரியாத மானிடர்க்குக்கந்தன்
முன்மணிவாசலுந் தோணுது. (அச)

முன்மணிவாசல் கடக்கணுமேசுவாமி
மூலஸ்தான மடுக்கணுமே
நன்மையுகந்த கதிரேசன்தனை
நானறியவகை சொல்லுமையா. (அரு)

நானுமறிந்தது மில்லையடிசொன்ன
நம்புவியேயெந்தன் சொல்லையடி
தேனருந்தவழி தோணட்டல்கந்தன்
சேருவைகாண முடியாது. (அசா)

சேருவைகாண முடியாட்டால்யிந்தச்
சிங்களவரெனும் ஸதானிகர்கள்
ஆறுமுகவ னறியாமல்நிதம்
ஆருக்கலங்காரம் செய்வார்கள். (அஎ)

ஆருக்கென்றால்வர்ன்னப் பேளையொன்றுஅதர்க்
கன்புற்றலங்காரம் செய்துகொண்டு
பாரியகேடக மீதேற்றிவீதி
பவனிவாரது முண்டுமடி. (அஅ)

பவனிவந்திடும் பேளையதுயென்ன
பாவினையாலே சமைந்தது
அவனியெல்லாம் புகழ்ந்தேற்றபேளைக்
கருள்நிறைந்தது மெவ்விதங்காண். (அகூ)

அருள்நிறைந்து சமைந்தவித்தைவெகு
அந்தரங்கமிந்தப் பெட்டகத்தை
குருவறிந்து தலக்காட்டால்கண்டு
கொள்ளமுடியாது வள்ளலையே. ௬௰

வள்ளலுகந்திடும் கோவிலுக்குமுழு
வச்சிரத்தட்டோடு போடாமல்
தெள்ளியமாமணி மேடையெல்லாம்செய்து
செப்போடிட்டது மேதுக்கய்யா. ௬௧

செப்போடல்லவே தோழியரேயிது
சிவந்தபத்தரை மாத்தாகும்
ஒப்பாதபுவி மானிடர்க்குயிது
செப்போடாகவே தோணுமடி. ௬௨

செப்போடிட்டதை மாத்தையிலேயின்னும்
சீர்திருத்திவரி சாத்தையிலே
அப்போதங்குள்ள மூலஸ்தானத்தை
அறிந்துகொள்ளாரோ சொல்லுமையா. ௬௩

அறிந்ததுண்டைய னுத்தரவால்பன்னி
ராண்டுக்கொருதர மாத்தினவர்
உரியசுத்தமவுனங் கொண்டுசமா
துகந்தடைந்தவர் கோடியுண்டு ௬௪

கோடிபேருண்டென்றும் சொன்னவரேகந்தன்
கொலுவில்மகிமையும் சொன்னவரே
தேடிக்கொண்டாடும் கதிர்மலைமேல்கந்தன்
சேருவைச்சேகர மெப்படிகாண் ௬௫

சேகரதான மலைகளுண்டுசுத்தி
திரண்டுருண்ட வனங்களுண்டு
ஏகமிருக சஞ்சாரமடிமலைக்
கிசைந்துபோனவ ரில்லையடி ௬௬

போனவரந்த மலைவளத்தைச்சொல்லி
புகழக்கேட்டே னதின்விதத்தை

ஆனாலவரெப்படிப்போனார்போக
லாகாதென்றெவ்விதம் சொல்லுவீர்காண் ௧௭

ஆகாதென்றது மெய்தாண்டிமுரு
கையனுத்தரவி னால்த்தாண்டி
யேகினாலந்தக் கதிர்மலைக்கிவழி
யிசையத்தோணா மிருள்விலக்கி. ௧௮

பிசையும்நல்ல வழியுமென்றீர்முன்னே
யேகமிருகசஞ்சார மென்றீர்
திசைக்கிச்செல்லாமல்த் தட்டிடுமோகண்டு
சேரும்படிவழி விட்டிடுமோ ௧௯

விட்டுவிடாதது மெய்யதற்கேகதிர்
வேலனுத்தர வானவர்க்கே
தட்டுப்படாதுமிருக மெல்லாம்வனம்
தாண்டியேயேறி நடந்திடலாம் ௨௰

நடந்துகாணுவ தெந்தமலைகந்த
நாதனிருப்பது மெந்தமலை
அடர்ந்தமேளத் தொனிகளுண்டோயங்கே
அண்டர்கள்கூட்டமதிகமுண்டோ ௨௧

அண்டர்கள்கூட்ட மதிகமுண்டுஅப்பால்
ஆறுமுகன்சபை யங்கேயுண்டு
கண்டாசைகொள்ளாத மானிடர்க்குசபை
காணவுந்தோணாது தோழிப்பெண்ணே ௨௨

தோணாதென்றது மெய்யவருப்பிருள்
சூழ்ந்தவனங்கள் கடந்தவரும்
காணாதமாமலைக் கேறினவர்சபை
கண்டுதொழாமல் வருவாரோ. ௨௩

கண்டுதொழுவ தெல்லாமலையுமெங்கள்
கந்தன்கனக சபைமலையே
தொண்டால்லால்க் கண்டபேருமில்லைஅங்கே
துடிவயிரவன காவலடி ௨௪

காவல்கொண்டமலேச் சார்பினிலேயெங்கள்
கர்த்தன்பவனிப்பதியினிலே
பேவுஞ்சபாதொன் றிருக்கிறதேயதை
விளங்கச்சொல்லு மெனக்குமதை. ௧௦௫

சொல்லுவேன்கேளு திரைகடந்தயோகத்
துரியாதீதத் துரைகடந்த
நல்லமுத்துலிங்க சுவாமிக்கடிமுந்தி
ராஜராஜ்கட்டிய கோவிலடி. ௧௦௬

கட்டியகோவிற் சிறந்ததிலேகதிர்
காமம்சிவஸ்தல மானதிலே
முட்டிவணங்கி முகையதீனென்கிற
முழக்கமேதிங்கே சொல்லுமையா. ௧௦௭

முழக்கமான நபிவரத்தில்வந்து
முத்தியடைந்தன ரித்தலத்தில்
வழக்கமாக முசிலீன்கள்நிதம்
வந்துவணங்குந்தீன் சத்தமடி. ௧௦௮

தீனதுகூறிய மாபதியில்நல்ல
சித்திரவேலவன் சன்னதியில்
தானமும்தர்மமும் செய்யவென்றுயன்ன
சத்திரம்கட்டின தார்காணும். ௧௦௯

கட்டியமாமடம் கெட்டியடிதர்ம
கர்த்தரெனும் நகரத்தார்கள்
ஒட்டியபோதிகை யிட்டமைத்தார்புக
ழூசந்ததர்ம மடம்சமைத்தார். ௧௧௦

உயர்ந்ததர்ம மிகுத்தோர்கள்செல்வ
மோங்கும்வசிய குலத்தார்கள்
இசைந்துவந்த வரைத்தேடியன்னம்
ஈவதுமுண்டோ மனம்நாடி. ௧௧௧

நாடியதர்ம மிகக்கொடுத்துகந்த
நாதன்கதிரேசன் வேலெடுத்து

ஆடித்திருவிழா நாளையிலேயிவ
ராண்டுக்கொருதரம் வாறதுண்டு. ௧௧௨

வாறதுண்டுநக ரத்தார்களென்று
மன்னவரேசொன்னீ ரின்னகரில்
ஆறுமுகன்கதி ரேசனுக்குயிது
ஆடித்திருவிழா முக்கியமோ. ௧௧௩

முக்கியமாய்க்கதிர் காமத்திலேசுற்றி
முக்கோணசக்கர வீதியிலே
சக்கரபாணி மருகரெனுங்கந்த
சாமிதிருவிழாக் கூட்டமடி. ௧௧௪

கூட்டமும்பாட்டமும் கொண்டாடுங்குடை
கொடிவிருதுகள் நின்றாடும்
நாட்டமுடைய திருநாளில்நிதம்
நடக்குகின்ற வளமையென்ன. ௧௧௫

வளமைவேழத்தின் மேல்மிகுந்துகந்தன்
மாணிக்கப்பேழை தனிலுகந்து
கலைதுலங்கிய வீதியிலேவரும்
கந்தன்பவனியைப் பாருங்கடி. ௧௧௬

கந்தனுக்கேர்த்த திருநாளிலிந்தக்
காசினியோரும் வரும்நாளில்
செந்தமிழோர்களும் கொண்டாடக்கந்தன்
தேருமேலேறுவ தென்றைக்கையா. ௧௧௭

தேருமேலேறும் வளமையில்லைச்சித்திர
தேருமிழுப்பது மிங்கேயில்லை
நேருடன்தண்டிகை மீதேறிசுவாமி
நீராடுப்பாணதைப் பாருங்கடி. ௧௧௮

நீராடுப்பென்றதும் தோன்றிலையேயிப்போ
நீர்சொன்னபாஷை விளங்கிலையே
தேருமின்னாட்டு வளமைகளோயிதைச்
சீருடனேசொல்ல வேணுமையா. ௧௧௯

சிருள்ளபாணிக்க கெங்கையிலேசுவாமி
தீர்த்தங்கொடுத்தருள் செய்யயிலே
நேருள்ளசிங்களப் பாஷையிலேயிதை
நீரறுப்பெனபதும் மெய்தாண்டி. கஉ௰

மெய்யானஆறு முகவரெனும்சுவாமி
வேஷியவள்ளி தெய்வானைவெனும்
தையலர்மேவும் கதிர்காமம்தனை
தான்கண்டபேருக்கு முத்தியுண்டோ. கஉக

முத்தியுண்டுநினைத் தானுமடிதவ
முத்தர்புகழ்கதிர் காமம்வந்தால்
சித்தியுமுத்தியு முண்டாகும்பிணி
சேராதருள்வார் முருகேசன். கஉஉ

கேசவன்தன்னரு மைக்குரியவள்ளிக்
கிசைந்தகந்தன் புகழ்புரிய
வாசமிகுந்த தமிழதனைச்சொன்ன
மன்னவரே யுமக்கெந்தவூரு. கஉங

மன்னர்புகழ்ராம நாதபுரம்சேது
மானகராம் திருப்புல்லாணி
ன்னயமாகிய ஊர்தாண்டிதங்கம்
ராமசாமியெந்தன் பேர்தாண்டி. கஉச

பேரையும்ஊரையு மேபுகழ்ந்துசொன்ன
பேர்பெற்றமானகர் மீதிருந்து
தாருலவுங்கதிர் காமத்துக்கேநீரும்
தானிங்கேவந்த வயணமென்ன. கஉரு

வந்துகொழும்பத னில்ச்சிறந்துவெகு
வாசமதாய்ச்சில நாளிருந்து
கந்தன்பவனியைக் கண்ணலேகண்டு
கைதொழுதேத்தவும் வந்தேனடி. கஉசா

கைதொழுதேற்றிய மெய்வாசனநம்ம
கந்தன்கதிரை முருகேசன்

தெய்வானைவள்ளி மணாளனுமேலினி
செந்தமிழால்துதி சொல்லுமையா. கஉஎ
சொல்லசொல்லச்சொல்லிக் கேட்கவர்க்குவரும்
துன்பமகற்று மிப்பாடவர்க்கும்
தில்லையெல்லைவல்லத் தாண்டவத்தாள்வாலை
தேவிசிவகாமி யின்தவத்தால். கஉஅ
அருள்பொருந்திய பூவாசன்வள்ளி
யம்மைதெய்வானைக் கதிரேசன்
திருவிழாவிற் சிறந்தவராம்கந்தன்
தீர்த்தங்கொடுத்தருள்தந்தவராம் கஉகூ
தீராதநோய்களை தீர்த்தவண்டிசுவாமி
சித்தம்வைத்துநம்மைக் கார்த்தவண்டி
நாரணனுக்கு மருகனிவன்ஜெக
நாதன்செந்தூரு முருகனிவன். கஙய
தேவசேனாதி பதிதாண்டிகூவும்
சித்திரச்சேவல்க் கொடியாண்டி
மூவர்புகழ்கந்தன் சன்னதியில்நின்று
முழங்கிக்கும்மி யடியுங்கடி. கஙக
சிம்மாசனத்தி லிருந்தவரைவளம்
சேர்கதிர்காம முகந்தவரை
யிம்மானிலத்தவர் போற்றியேஅவ
ரெண்ணிவந்தபடி நேத்தியே. கஙஉ
செலுத்தும்வேடிக்கை பாருங்கடிகந்தன்
தீபதெரிசனம் பாருங்கடி
சலத்தில்முக்கியம் மெத்தவடிகந்த
சாமிக்கிசிங்காரம் நித்தமடி கஙங
முப்பத்துமுக்கோடி தேவருக்கும்நல்ல
மூவருக்கும்புவி யாவருக்கும்
நாற்பத்தெண்ணாயிரம் தானவர்க்கும்தரு
நாவலர்க்கும்திசை காவலர்க்கும் கஙச

சிங்காரக்கும்மி தமிழ்ச்சுறக்கும்நம்ம
செங்கைவேலன் கதிரேசனுக்கும்
மங்கையர்வள்ளி தெய்வானையர்க்கும்ஜெய
மங்களம்வாழி மிகவாழி. ாகூ௫

சித்திரவேலா யுதம்வாழிகந்தன்
சேவல்மயிலு மிகவாழி
சத்தியருள்கந்தன் சன்னதியில்ப்புகழ்
சாமியிடுபணும் வாழியதாம். ௱கூசு

கதிர்காமக்கும்மி.

முற்றிற்று.

உ

சிவமயம்.

# மங்களம்.

ஆதியாம்பரஞ் சோதிக்கும் அபிராமிக்கும்
ஜெயமங்களம்
மாதுவள்ளி தெய்வானைக்கும் வடிவேலர்க்கும்
சுபமங்களம் க

திருவுக்கும் திருமாலிக்கும் தெய்வதேவர்க்கும்
ஜெயமங்களம்
குருவுக்கும் குமரேசர்க்கும் குறமாதுக்கும்
சுபமங்களம் உ

மாலருள்பிர்ம்ம தேவர்க்கும் கலைமாதுக்கும்
ஜெயமங்களம்
அலைசூழ்கதிர் காமம்வாழி முருகையர்க்கும்
சுபமங்களம் ங

செந்தமிழ்க்கவி யாளர்க்கும் புவியாளர்க்கும்
ஜெயமங்களம்
கந்தனறு முகவன்வேல் முருகையார்க்கும்
சுபமங்களம். ச

மங்களம். முற்றிற்று.